# திராவிடநாடு

REGD M 4642


## பெயரளவில் சுதந்திரம்

—*—

"பெரிய தொழிற்சாலை முதலாளிகள், வர்த்தகர் முதலியவர்கள் இந்தியாவுக்குப் பெயரளவில் சுதந்திரம் வந்தால் போதுமென்று திருப்தி அடையத் தயாராய் இருக்கிறார்கள். சில இந்திய முதலாளிகள் வியாபாரத்தை மிகப்பெரிய அளவுக்குப் பெருக்கிக்கொள்ள முயற்சிக்கிறார்கள். பிரிட்டிஷ் உதவியின்றி அவர்களால் உலக மார்க்கெட்டுகளை எட்டிப் பார்க்க முடியாதென்று அவர்கள் நினைப்பதால் பெயரளவில் சுதந்திரம் வந்தால் போதுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். மக்களின் இயக்கங்களுக்குப் பயந்து அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள்."

ஷாகோவ்


மலர் 6 ] 6—7—47 [ இதழ் 6

# ★ ஏனோ இந்த இடைக்கால மதி ★

(நக்கீரன்)

கொலை, களவு, கள், காமம், சூது, வஞ்சனை முதலிய கொடுமைகள் உலகிலே அறிவோடுவாழும் எவராலுமே வெறுத்து ஒதுக்கப் படுவனவாகும். கொலை களவு முதலான கொடிய பண்புகள், மக்களால் கையாளப்படுமானால் அவற்றால் ஏற்படும் தீமைகள் மக்களினத்தின் நல்வாழ்வையே கெடுத்து, அவர்களைக்காட்டுமிராண்டிகளாக்கி விடுவது மட்டுமன்றி, ஒழுக்கத்தின் உயரிய பண்பையே உறையிட்டு மூடுவது போலவுமாகும் என்பதனாலேயே இச்சொல்லபபட்ட கொடுமைகள் மக்களினத்தவரால் கையாளப் படக்கூடாதென்று அறிவுடையோர் கூறியுள்ளனர்.

யாதொரு காரணமுமின்றி ஒருவனையோ, ஒன்றையோ கொலை செய்வது, இல்லாமை — ஏலாமை — பகைமை ஆகியவற்றை முன்னிறுத்திப்பிறர்பொருள்களைக்களவாடுவது, பிறர் மனை புகுந்து பெண் வேட்டையாடுவது, அறிவை மயக்கும் கள் முதலான போதைப் பொருள்களை அருந்தி அடாத செயல்களுக்கு ஆளாவது, சூதாடுவது, பிறரை வஞ்சித்து வாழ்வதுபோன்றவைகள், மக்களால் கையாளப்படக் கூடாதென்பதற்குக் காரணங்கள் பல கூறப்படினும், நம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் அக்கொடுமைகளுக்கு மக்களை ஆளாவதற்கு உறுபெரும் துணைக் கருவிகளாகவும் தூண்டுகோலாகவும் இருப்பவை மதநூல்களே என்று கூறினால் அது மிகைபடக்கூறியதாக ஆகாது.

நம் நாட்டில், நம் மக்களுக்காக என்று அன்றைய மத ஆசிரியர்களும், மதப்புலவர்களும் ஆக்கிவைத்த மதநூல்கள் எதனை எடுத்துப் பார்த்தாலும் — மேற் சொல்லப்பட்ட கொடுமைகளை மக்கள் செய்யவேண்டும்—செய்யலாம்—செய்தால் தீமை இல்லை என்று தூண்டிவிடும் முறையிலேயே அமைந்துள்ளன.

பொதுவாகவே நம் நாட்டிலுள்ள மத நூல்களெல்லாம் மக்களுக்கு மூடப்பழக்க வழக்கங்களை உண்டாக்கி அவர்களை அறியாமைப் படுகுழியில் வீழ்த்தி, இயற்கைக்கு மாறான வழியில் ஒழுகச் செய்வது மட்டுமன்றி, இத்தகைய கொடுமைகளுக்கும் மக்களை ஆளாக்கி விடுவதென்றால், நம்முடைய மத நூல்களால் நமக்கு யாதாயினும் பயன் உண்டாகுமா?

எடுத்துக்காட்டாகப், பெரிய புராணத்தில் ஒரு நிகழ்ச்சியை இங்கு குறிப்பிடுகிறேன். தொண்டை நாட்டிலே திருவேற்காடு என்னும் ஊரிலே, வேளாளர் குலத்திலே ஒரு சிவ அன்பர் இருந்தார். சிவனடியார்களுக்கு அன்னமிட்டு அவர்கள்விரும்புவதைக் கொடுப்பது அவர் வழக்கம். இந்தச் செய்கையினால் அவருடைய பெரும் செல்வம் முழுவதும் ஒழிந்துவிட்டது. தம்மிடம் பொருளில்லாததால் அடியவர்களுக்கு அன்னமிட முடியாத நிலைமை ஏற்பட்டது. என்றாலும் அந்தப் பணியை விடாது செய்யவேண்டுமென்ற விருப்பம் மட்டும் அவரை

(7-ம் பக்கம் பார்க்க)

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

சூடம் கூடக்கொளுத்தினர், திவான்ஜிக்கு! அந்தக்காலத்திலேயே, திவானின் ஆணவத்தை அடக்க, இந்த ஏடுகள் முனைந்து இருந்தால், திருவாங்கூரைவிட்டு சர். சி. பி, வெளி ஏறி இருப்பார். அப்போது அவரைச் செல்லப்பிள்ளையாக நடத்தினர்.

அதே போலத்தான் திருவாங்கூர் மிச்ச இந்தியாவுடன் சேரும்என்று ஒரு வார்த்தை இதே திவான் கூறிவிட்டால் போதும், இதே ஏடுகள், அவருடைய அடக்கு முறைகளைக் கண்டிக்காமல், அவர் அமைதியை நிலைநாட்டுகிறார், ஒழுங்கை நிலை நாட்டுகிறார், மக்கள் வீண்கிளர்ச்சி செய்கிறார்கள், கம்யூனிஸ்டுகளின் தூண்டுதல் என்று எதைஎதையோ சாக்குக்காட்டி, திவானின் போக்கை ஆதரிக்க முற்பட்டுவிடும். இந்த ஆபத்தை ஏன், சமஸ்தானக்காங்கிரஸ் பாடுபட்டுத் தேடிககொள்ள வேண்டும்!

திருவாங்கூர் தனிநாடு! — இது முதல் முழக்கமாகட்டும்.

திருவாங்கூரில் திருவாங்கூர் பிரமுகர் திவானாகவேண்டும் — இது இரண்டாம் முழக்கமாகட்டும்.

திருவாங்கூரில் மக்களாட்சி ஏற்படட்டும் என்பது மூன்றாம் முழக்கமாகட்டும் என்று நாம் கூறுகிறோம்.

உதயப்பூர், பூந்தி, கோடா, துங்கார்பூர், விஜயநகர், காராவ்லி, கிஷன்கார், பிரதாப்கார்க், ரட்லாம், ஜெய்சால்மர், சயிலானா, பாலான்பூர், இடார், இத்தனை சமஸ்தானங்களும், ராஜஸ்தான் என்ற பொதுப் பெயருடன் ஒரு அமைப்பாகி, அந்த அமைப்பு, மிச்ச இந்தியாவுடன் சேரும், என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. காங்கிரசார் இது கேட்டுக்களிக்கிறார்கள். ஆனால் இதன் உட்பொருள் என்ன ஆகிறது? இவ்வளவு சமஸ்தானாதிபதிகளுக்கும், தக்க பாதுகாப்பும் துணையும் கிடைத்து விட்டது என்பது தான் உட்பொருள். இனி இந்தச் சமஸ்தானங்கள், மிச்ச இந்தியாவிலே, செல்வாக்குத் தேடிக்கொள்ளமுடியும், ஏற்கனவே 'பணமூட்டைகள்' காங்கிரசைக் கைப்பற்றிவிட்டன, என்று தீவிரக்காங்கிரசார் உள்ளம் நொந்து கூறுகின்றனர். இனிஇந்த ராஜாக்களும், பணகுண்டுகளை வீசுவார்கள்; அவர்களுடைய சொல்லுக்கு, மத்ய சர்க்காரிலே மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்டு விடும். டாட்டா, பிர்லாக் கூட்டமோ, இந்த ராஜாக்களுடன் கூடிக் கொள்ளும், ஏனெனில், அப்போதுதான்அவர்களால்அந்தச்சமஸ்தானங்களிலே, இலாபவேட்டைஆட முடியும். இந்தஇருசக்திகளும்ஒன்று கூடினால்விளைவு என்ன ஆகும்? என்பதையோசித்தால், இந்தத் திட்டத்திலே உள்ள கேடுநன்கு விளங்கும். இந்த ராஜஸ்தான் அமைப்பிலே, கூறப்படும்முதல் விஷயம் என்ன தெரியுமோ! சமஸ்தானங்களிலே எல்லாம் ராஜா இருப்பார்—அவருக்கு ஒரு குறையும் கிடையாது—அந்த முறையிலே மாற்றம் இல்லை.

ஆக ராஜாக்கள் தங்கள் நிலையைப் பாதுகாத்துக்கொள்ளவே இந்தத் திட்டம் பயன்படும். ஒருராஜாவுக்கு ஆபத்து என்றால், ராஜஸ்தான் அமைப்பிலே உள்ள மற்ற ராஜாக்கள் அவருக்கு உதவி செய்வார்கள்! ஆக, இந்த அமைப்பிலுள்ள, எந்த ராஜாக்களுக்கும், தங்கள் நாட்டு மக்களுக்கு உரிமை தர வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படாது. அதாவது ஜனநாயகம் மலராது!

ஆகவேதான், ராஜஸ்தான் போல திருவாங்கூரும், மிச்ச இந்தியாவுடன் சேரவேண்டும் என்று கூறுவது, கடைசியில், மன்னராட்சிக்குப் பலம் தருமே தவிர மக்களாட்சிக்கு வழி செய்யாது என்று கூறுகிறோம்.

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா

# திராவிடநாடு

ஆண்டுசந்தா ரூ 7

# போர்முறை மாறவேண்டும்!

❋

1. திருவாங்கூர், பிரிட்டிஷ் பிடியிலிருந்து விலகி தனி அரசு செலுத்த வேண்டுமா, வேண்டாமா?

2. திருவாங்கூர், முடியாட்சி முறையில் மாற்றம் ஏற்பட்டுக், குடியாட்சிச்சிறப்பு ஏற்படவேண்டுமா, வேண்டாமா?

இவை இரண்டும் தனித்தனிபிரச்னைகள்—ஆனால் இன்று இரண்டும் ஒரே குழப்பமாகிவிட்டது—

திருவாங்கூர்மக்களுக்குப்பொறுப்பாட்சி வேண்டும், அரண்மனை அதிகாரம் அளவுபடுத்தப்படவேண்டும், மக்களாட்சி ஏற்படவேண்டும், முடிதரிக்கும் மன்னர், இனி ஒரு சின்னமாக இருக்கவேண்டுமே ஒழிய, அவருடைய புன்சிரிப்பிலே பிறருக்கு வாழ்வளிக்கும் சக்தியும், கோபத்திலே பிறருடைய வாழ்வைக் கருக்கும் வல்லமையும் இருக்கும்நிலைமாற வேண்டும், என்று பட்டம் தாணுப்பிள்ளை கூறுகிறார். இந்த 'வாதம்'—யாரும் மறுக்கமுடியாதது; அதிலும் இந்த 'ராஜாதிராஜர்களின்' யோக்யதைகளை அறிந்தவர் எவரும், முடியாட்சிமுறைமாற வேண்டுமென்று கூறத்தயங்கமாட்டார்கள்.

பல 'ராஜாக்கள்' பிளாசி யுத்தத்துக்குப்பிறகு, வெள்ளைக்காரனிடம் பல்லைக்காட்டி, தங்கள் பீடத்தைக் காப்பாற்றிக்கொண்டவர்கள். அவர்களின் சபையிலே, கட்டியக்காரன், "ராஜாதி ராஜ, ராஜமார்த்தாண்ட ராஜகோலாகல, வீரதீரகெம்பீர" என்று பராக்குக் கூறும்போதுகூட, அவனுக்கேதெரியும், அவ்வளவு வாசகமும்வாங்குகிறசம்பளத்துக்குக்கூறுவதே தவிர, உண்மை அல்ல என்று. அப்படிப்பட்ட 'ராஜாக்கள்'—மக்களாட்சி கேட்பவர்களின் போக்கைக் குறை கூறவோ, கண்டிக்கவோ,முடியாது, கூடாது. ஜனநாயகக் கோட்பாட்டின்படி, முடியரசுமுறைமாறித்தான் ஆகவேண்டும். பிரிட்டிஷ் மன்னரின் மாளிகை பழுதுபார்க்கப்படவேண்டுமாம், அதற்குத்தேவையான சாமான்களுக்கு, அவர் பிரிட்டிஷ் சபை மந்திரிக்கு 'மனு' போடுகிறார், மற்றமக்கள் போலவே! மந்திரியும், மனு, மன்னரிடமிருந்தல்லவா வந்தது, எனவே அவருடைய இஷ்டத்தை முதலில் பூர்த்தி செய்து வைத்துவிட்டுப் பிறகு மற்றவர்களைக் கவனிப்போம் என்று மண்டியிட்டாரா? அதுதான் இல்லை; கொஞ்ச நாளாகும் என்று கூறிவிட்டார். மன்னரின் மாளிகை பழுது பார்ப்பது தவக்கப்படுகிறது. ஆம், மாளிகை பழுது பார்க்கப்படவில்லை. ஆனால் மக்களாட்சி முறைக்கு பழுது ஏற்படாதபடி மந்திரி பார்த்துக்கொண்டார். இன்றும், விண், மண், கடல் மூன்றிலும் படைபலம் கொண்ட பிரிட்டன்தான்—அங்கு மன்னருக்கு இந்நிலை என்றால், திருவிதாங்கூர், முடியாட்சி முறைமாற முடியாததாகவா இருக்கவேண்டும்! கைகொட்டிச் சிரிப்பார்கள்!!

பட்டம் தாணுப்பிள்ளை,மக்களின் உரிமைப்போருக்காக முரசுகொட்டுவது, நியாயமானது.

இந்த மறுக்கொணாத பிரச்னை, வேறோர் பிரச்னையுடன் இன்று இணைந்துவிட்டது—இணைக்கப்பட்டுவிட்டிருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சிமுறை ரத்தாகிறது—ரத்தாகும் போது, முடியாட்சி முறையின்கீழ் இருக்கும் பகுதிகள் முடிதரித்தோரிடமும், குடியாட்சி முறையின்கீழ் உள்ள பகுதிகள், குடிமக்களிடமும் தரப்படுகின்றன. வேறுவிதம் செய்வதற்கில்லை. முடிதரித்தோர்களை, முன்பே, பிரிட்டிஷார் நீக்கிவிட்டிருந்திருக்கலாம். சமயமும் சக்தியும் அவர்களுக்கு முன்பு இருந்தது; ஆனால் செய்யவில்லை. சூதுதான்! ஆனால் பெயர் ராஜதந்திரம். இதன் பயனாக இப்போது புதிய பிரச்னை கிளப்பிவிட்டது.

திருவாங்கூர், சுதந்திரத் தனிநாடு ஆகிறது, என்கிறார் திவான் சர்.சி.பி.

நிலைமை உண்மையில் அதுதான்.

பிரிட்டிஷார் போகிறார்கள், அவர்களோடு, மக்கள் ஆட்சியாக உள்ள பகுதிகளிலுள்ள கவர்னர் முதலியோர் போகிறார்கள், அதேபோல சமஸ்தானங்களிலுள்ள பிரிட்டிஷ் ரெசிடெண்டுகள், போகிறார்கள்.

கவர்னர் ஜெனரலும் போகிறார், வைசிராயும் போகிறார். இரண்டுபட்டப்பெயர்களும், ஒருவருக்கேதான் என்றாலும், கவர்னர் ஜெனரல் என்ற பெயர், மக்களாட்சிப் பகுதிகளின்மீது பிரிட்டிஷாருக்குள்ள ஆதிக்கத்தைக்குறிக்கிறது, வைசிராய் என்ற பெயர், மன்னர்களாட்சிக்கு உட்பட்ட இடங்களின்மீது பிரிட்டிஷாருக்குள்ள ஆதிக்கத்தைக் குறிக்கிறது. இனி இந்த இரண்டு நிலையும் பிரிட்டிஷாருக்கு இல்லை; எனவே கவர்னர் ஜெனரல் போனதும், மக்களாட்சி மண்டலங்கள்விடுதலை பெறுகின்றன; வைசிராய் வெளிஏறினதும், மன்னராட்சிமண்டலங்களும், சுதந்திரம் பெறுகின்றன. எனவே சட்டரீதியாக நோக்கினாலும் சரி, உள்ள நிலைமையைக்கவனித்தாலும் சரி, திருவாங்கூர்தனிச் சுதந்திரநாடு ஆகிறது என்பதில், விவாதத்துக்கு இடமில்லை.

விவாதம் விபரீத அளவுக்குப் போவதற்குக்காரணம், இந்தச்சுதந்திரப்பிரச்னையும் மக்களாட்சி கோரும் பிரச்னையும், இணைக்கப்படுவதுதான்.

பட்டம் தாணுப்பிள்ளை, திருவாங்கூர் தனி சுதந்திரநாடு என்று பிரகடனம் செய்யப்படுவதை எதிர்க்க வேண்டிய அவசியமில்லை, அதன் காரணமாக, மக்களின் உரிமைப் போர் நடத்தத் தயங்கவேண்டியதுமில்லை.

"திருவாங்கூர் தனிநாடு!" என்று பிரகடனம் வரட்டும். "ரொம்பச் சந்தோஷம்! அங்கு இனி மக்களாட்சி எழட்டும்" என்று பட்டம் தாணுப்பிள்ளை கூறட்டும்.

தனிநாடாகாமல், பிரிட்டிஷ் மேற்பார்வையில் திருவாங்கூர் இருக்கும்போது, மக்களின் ஆட்சிக்காகப் போர் தொடுத்தால், மன்னரின் படைமட்டுமல்ல, பிரிட்டிஷ் ஈட்டிமுனையும், திருவிதாங்கூர் சுதந்திர வீரர்களைத் தாக்கவரும்.

இனி அந்தநிலை இல்லை. திவானே தெரிவிக்கிறார், திருவாங்கூர் சுதந்திரநாடு என்று. சுதந்திர நாட்டிலே, மக்கள் ஆட்சிமுறையை மாற்ற எடுத்துக் கொள்ளும் எந்தக்கிளர்ச்சியும், உள்நாட்டு விவகாரம்—அதிலே தலையிட, யாருக்கும் அதிகாரம் இல்லை. அந்தநிலையில், மக்களுக்கே வெற்றி, நிச்சயம்.

ஆகவேதான், மக்களின் உரிமையை நிலைநாட்ட, நல்லதோர் சந்தர்ப்பமாக்கிக் கொள்ளலாம், திவானின் அறிக்கையை.

ஆனால், நிலைமையை வேறுவிதமாக்கி விட்டார்கள், குழப்பி விட்டார்கள்.

'மிச்ச இந்தியாவுடன்' திருவாங்கூர் சேரவேண்டும், என்கிறார் தாணுப்பிள்ளை-முடியாது, திருவாங்கூர் தனியாகத்தான் இருக்கும்—பிரிட்டிஷ் பிடியிலிருந்து விலகி, இன்னொரு பிடியில் சிக்குவானேன்—இலண்டன் போய் அலகாபாத்வந்த தடி தோழி என்று பாடுவானேன், என்கிறார் சி. பி. அவருடைய நோக்கம் எதுவாகவேனும் இருக்கட்டும். அவருடைய கண்களிலே நாம், என்றுமே ஜனநாயக ஒளிவீசிடக்கண்டதில்லை! அந்தப் பெரியக்கண்கள், அரண்மனைகளைச் சொக்கச் செய்யும் அதியற்புத ஒளியைத்தான், பல காலமாகக் கக்கிக்கொண்டுள்ளன. எனவே அவருடைய 'சுதந்திரப் பிரகடனம்'—மிகத்தூய்மை நிரம்பியது என்று நாம் வாதாடவில்லை. எக்காரணம் கொண்டு அவர், தனித்தே இருக்கும் திருவாங்கூர் என்று கூறினுலும் சரி, அந்தநிலைமையை மக்கள் தமக்குச்சாதகமாக்கிக் கொள்ளலாம் என்பது நமதுநம்பிக்கை.

சுதந்திரப் பிரகடனம் செய்யாமல், மிச்ச இந்தியாவுடன் திருவிதாங்கூர்—மைசூர் போலச்சேரச்சம்மதிக்கிறது என்று வைத்துக்கொள்வோம், அதனாலே, பட்டம் தாணுப்பிள்ளையின் உரிமைப் போருக்கு என்ன சாதகம் கிடைக்கும்? மிச்ச இந்தியாவுடன் திருவிதாங்கூர் இணைக்கப்படுகிறதுஎன்றால், உடனே தானாகவே, சட்டப்படியே, இயற்கையாகவே, ஒரு முயற்சியுமின்றி, திருவிதாங்கூரில் மக்களாட்சி ஏற்பட்டுவிடுமா? இல்லையே! அங்ஙனமிருக்க, மிச்ச இந்தியாவுடன் இணையவேண்டும் என்பதைப் பட்டம் தாணுப்பிள்ளை வற்புறுத்துவானேன்? இங்குதான், நாம் அவருடைய போக்கு, தவறுகிறது என்று கூறுகிறோம்.

இன்னமும் கொஞ்சம் கூர்ந்து கவனித்தால், மிச்சஇந்தியாவுடன் திருவாங்கூர் இணைக்கப்பட்டால் மக்களின் உரிமைப் போருக்குக்கேடுகூட இருக்கிறது என்பது தெரியும்.

திருவாங்கூர் மக்களாட்சிக்காகப் போரிடுகையில், இப்போது, திருவாங்கூர் மன்னரின் படைபலமும் அதிகாரமும் மட்டுந்தான், மக்களைத்தாக்கும்—மிச்ச இந்தியாவுடன் திருவாங்கூர் தொடர்பு வைத்தால், அந்தச்சமயத்தில், மன்னருக்குப் பக்கபலமாக, மத்யசர்க்கார் படைபலமும் கிளம்பும், "நான் மிச்ச இந்தியாவிலே ஒரு அங்கமாக இருக்கிறேன். என் ஆட்சியைத் தொலைக்க இங்கே ஒரு கும்பல் கிளம்புகிறது. இதை அடக்கப் படைவேண்டும், உதவிவேண்டும்" என்றுதிருவாங்கூர் கேட்குமானால், மத்யசர்க்கார், குழப்பத்தையும் கலகத்தையும் அடக்கி, அராஜகத்தை ஒழித்து அமைதியை நிலைநாட்டுவதற்காகப் படைகளை அனுப்பித்தான் தீரும். ஆக, வலியச் சென்று வம்பை விலைக்கு வாங்குவதாக முடியும், அந்த இணைப்பு.

மன்னர்களாட்சியை ஒழித்துவிடுவது எங்கள் நோக்கமல்ல—என்று பன்முறை காங்கிரஸ் கூறிவிட்டது. மக்களுக்கு ஆட்சியிலே பங்குதரவேண்டும் என்று இதோபதேசம் செய்கிறதே யொழிய, மன்னர்கள் ஆள்வது என்ற முறையே கூடாது என்று காங்கிரஸ்கூறவில்லை. இது, மன்னர்களுக்குக்காங்கிரஸ் தந்துள்ள உறுதிமொழி! இந்நிலையில், சமஸ்தானதிபதிகள், காங்கிரசின் தயவைப் பெற்று, மிச்ச இந்தியாவில் இணைக்கப்பட்டுவிட்டால், பிறகு, சுலபத்திலே மக்கள்கிளர்ச்சியை அடக்கிவிடமுடியும்.

ஆகவே தான் நாம் திருவாங்கூர் தனிநாடு என்று நிலைமை ஏற்படுவதையே, அந்நாட்டில் மக்களாட்சிஏற்படச் சாதகமாக இருக்கும் என்று கூறுகிறோம்.

சர். சி. பியின் ஏதேச்சாதிகார மனப்பான்மை நாம் அறிந்ததே. அவருடைய ஆட்சியின் விளைவுகளையும் நாமறிவோம். எனவே அவருடைய போக்கை நாம், தூய்மையுள்ளது என்று ஒருக்காலும் கொள்ள முடியாது. ஆனால், அவருடைய போக்கையே, சமஸ்தானக் காங்கிரஸ், தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள முடியும் என்பதை மட்டும் கூறுகிறோம். அதாவது பட்டம் தாணுப்பிள்ளையின் போர்முறை மாறவேண்டும் என்று கூறுகிறோம். திருவாங்கூர் சுதந்திரநாடு என்று அறிவிக்கப்படுவதையோ, அந்நாடு, மிச்ச இந்தியாவுடனோ, வேறுஎந்தப் பகுதியுடனோ இணைந்திருக்கவேண்டுமென்பதில்லை என்ற திட்டத்தையோ எதிர்க்காமல் விட்டுவிட்டு, திருவாங்கூர் தனிநாடு ஆனதும், உடனடியாக, திருவாங்கூருக்குத் திவான் திருவாங்கூரிலேயே கிடைப்பார் என்றுகூறி, கிளர்ச்சி ஆரம்பித்து, திவானை, விரட்டவேண்டும். இந்தத் திவான் விலகினால், திருவாங்கூர் மன்னரின் பார்வை மக்கள்மீது, அவர்களுக்குள்ள மகத்தான சக்தியின்மீது விழும். மன்னரால், மக்களின் எதிர்ப்பைமீறி ஏதும் செய்யமுடியாது. இதுவரையில் மக்களாட்சிக்காக, நடத்தப்பட்ட கிளர்ச்சிகள், பட்ட வேதனைகள், செய்த தியாகங்கள் யாவும், பலன் அளிக்காமற் போனதற்குக் காரணம் என்ன? மன்னர், உயரஉயர ஏறிவிட்டதற்குக் காரணம் என்ன? திவான் சர். சி. பி. யின் போதனை, மன்னருக்கு புமுக்கமுழுக்க நிரம்பி விட்டது. அதுமட்டுமல்ல. இப்போது, மிச்ச இந்தியாவுடன் சேரமாட்டேன் என்று கூறுகிறாரே என்பதால் ஏற்பட்டஆத்திரத்தினால், இங்குள்ள பத்திரிகைகள், இதுபோது அவரைக் கண்டிக்கின்றன—சற்றுக் காரசாரமாக. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக, திவான் திமிருடன் நடத்திய ஆட்சி முறையைக் கண்டித்தனவா இதே ஏடுகள்? இல்லை! அடக்குமுறையை அவிழ்த்து விட்டார்! சுதந்திரத் தேவியின் காவலர்கள் இங்கு சும்மாதான் இருந்தனர்.

(2-ம் பக்கம் பார்க்க)

# திக்கெட்டும் திராவிட முழக்கம்.

## தலைநகரில் தலைவர்.

### நாடெங்கும் விழா.

திராவிடநாடு திராவிடருக்கே! என்றமுழக்கம், ஜூலை 1-ந்தேதிதமிழகமெங்கும்ஒலித்தது. வீறுகொண்ட இளைஞர்கள், குறிப்பிடத்தக்க நகர்களில்மட்டுமல்ல, சிற்றூர்களில்கூடப் பவனிவந்தனர், தங்கள் பிறப்புரிமையைக் கூறிக்கொண்டு. ஊர் தோறும் உற்சாகமான ஊர்வலங்கள், விழா போன்றிருந்தன. யானைமீது கொடி! குதிரைகள்மீது! மோட்டார்கள்! சைக்கிள்களில் இளைஞர்கள்! ஊருக்கு ஊர், விதவிதமாக, அன்று காலை உற்சாக ஊர்வலங்கள் நடைபெற்றன. மாலையிலே, பொதுக்கூட்டங்கள். திராவிட நாடு தனி நாடு ஆக வேண்டும் என்ற பிரச்னை விளக்கப்பட்டு, தலைவரின் அறிக்கை படிக்கப்பட்டு, ஆயிரக் கணக்கான மக்கள் ஆர்வத்துடன், திராவிடநாடு அடைந்தே ஆகவேண்டும் என்ற உறுதிமொழியைப் படித்து, அதை அடையும்வரை அயரமாட்டோம், உழைப்போம், என்ற சூள் உரைத்த காட்சி, புதிய எழுச்சியைச் சித்தரிப்பதாக இருந்தது.

விழிப்புற்ற திராவிடம் வீறுகொண்டு எழுந்ததை விளக்கும் இந்த விழாச் செய்திகள்; தேசீயத் தாட்களிலே இருட்டடிப்புக்கு ஆளாவதால், நாட்டு மக்கள் முழு உருவையும் அதன் உட்பொருளையும் உணர முடியாமல் போய்விடுகிறது, என்ற போதிலும், குறிப்பிட்ட ஒரே நாளில், எல்லா ஊர்களிலேயும் இந்த நாள் நடைபெற்றதால் மறுநாள் பத்திரிகைகளைப் பார்த்தால் மட்டுமே தெரிந்துகொள்ள வேண்டிய சம்பவமாகாமல், மக்களின் நினைவிலே நிற்கும் நாளாக ஆகிவிட்டது. திராவிடர் கழகம், எவ்வளவு இருட்டடிப்புக்கு இடையே வேலை செய்யவேண்டி இருக்கிறது என்பதை, இந்தச் சம்பவம் நன்கு விளக்கிவிட்டது.

தலைநகரில் தலைவர் பேசி இருக்கிறார், பிரம்மாண்டமான கூட்டத்தில்—கடற்கரையில். இந்துஇதழில் கால்கலம்!! இவ்வளவுதான், தரமுடிந்தது. அதுவும், கிரிக்கட், டென்னிஸ், கோல்ப், வாலிபால், குத்துச்சண்டை, இவைகளைப் பற்றிய செய்திகளே கொண்ட பகுதியில்! அவ்வளவுதான், தனிநாடு கேட்கும் உரிமைப் போர் முரசொலிக்கு, இந்து இதழ், முக்கியத்துவம் தருகிறது. அவ்வளவு அலட்சியப்படுத்தப்படுகிறோம் நாம்! இந்த அலட்சியம், நமது ஆர்வத்தை அழித்துவிடும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள், நமது ஆர்வம் இதனால் அதிகரிக்கிறது என்பதை உணராத அப்பாவிகள் அவர்கள். கிரிக்கட் முதலிய விளையாட்டுச் செய்திகள் பக்கத்திலே, பெரியாரின் பேருரை நிகழ்ந்த சேதியை வெளியிட்டதன் மூலம், அவரையும் இயக்கத்தையும் அலட்சியப்படுத்தியதாக எண்ணும் இந்துவுக்கு, ஒன்று கூறுகிறோம், நாங்கள் நீர் அலட்சியத்துக்காக வென்று அனுசரித்த அந்தப் போக்கையும்கூட, எங்களுக்கு ஆர்வம் தருவதற்கே பயன்படுத்திக் கொள்வோம்! கிரிக்கட், முதலியன, வீரர்களின் விளையாட்டு! அவர்களின் பலம், புத்தி, கட்டுப்பாடு, திறமை இவைகளை விளக்குவது. திராவிட நாடு தனி நாடு ஆவதற்காக எடுத்துக் கொள்ளப்படும் முயற்சியும், வீரரின் செயல்! ஆம்! வீணரின் விழிக்கு அது விளையாட்டாகத் தோன்றட்டும், கவலையில்லை—எமக்கு விடுதலை விழா அந்நாள்.

நாட்டிலே நாற்பதுஆண்டுகளுக்கு மேலாகத் தொண்டாற்றி வருபவரும், இன்று திராவிட நாட்டுப் பிரிவினைக்காகப் போரிடுபவரும், ஆச்சாரியார்களையும் ஓமாந்தூரார்களையும் தமது நண்பர் பட்டியலிலே இன்றும், இன்னமும், வைத்துள்ள வருமான, ஒரு தலைவரின், முக்கியமான, சம்பவம் என்று கூறவேண்டிய சொற்பொழிவுக்கு, இந்துவில் இடம் இல்லை! இது எங்கள் கவனத்தில் இருக்கும், என்றும்.

இந்துவில் வெளிவந்தாலென்ன வராமற்போனாலென்ன, மந்திரிமார்கள் போலீஸ் பந்தோபஸ்திலே கூடினாலும், மணல் மாரி பொழியப்படும், அந்தக் கடற்கரையில், பெரியார், ஆற்றிய சொற்பொழிவு, திராவிடருக்கு இன உணர்ச்சியைப் பலமாக ஊட்டத் தவறவில்லை—உறுதியும் உற்சாகமும் பெற மக்கள் பல்லாயிரவர் அங்கு கூடினர்—பெற்றனர்! அந்த உறுதியையும் உற்சாகத்தையும், இந்துவின் இருட்டடிப்பு என்ன செய்யும்? ஜூலை முதல் தேதி, தமிழகத்திலே ஆயிரமாயிரம் இளைஞர்களின் விழிகளிலே இருந்து கிளம்பிய ஆர்வ ஒளி, இந்துவின் இருட்டடிப்பைக் — கிழித்தெறியும் தன்மை உடையது. அது இந்துவுக்குத் தெரியாது!

பெரியாரின் பேருரை நிகழ்ந்து கொண்டிருந்த அதே நேரத்தில், குடந்தையிலே நெடுஞ்செழியன், சங்கத்தையும் சரித்திரத்தையும் சான்றுக்கு அழைத்து, திராவிட நாடு திராவிடருக்கு என்பதை விளக்கிக்கொண்டிருந்தார், கோவையில் அன்பழகன், கொட்டும் திராவிட முரசொலி கேட்டு, உரிமைப் போர் தொடங்குகிறது என்பதை அனைவரும் உணரட்டும் என்று அறிவித்துக் கொண்டிருந்தார், வேலூர் கோட்டை வெளியிலே நண்பர் நடராஜன், நமது நாடு திராவிட நாடு இதை நாம் ஆள்வதிலே மற்றவருக்கு என்ன கேடு என்று கேட்டுக்கொண்டிருந்தார், தொலைவிலுள்ள தூத்துக்குடியில், பெற்றால் திராவிட நாடு இன்றேல் இடுகாடு, என்று முழக்கமிட்டனர். புதுவையில்,புத்துணர்ச்சி பெற்று விட்டோம், இனிப்புது அரசு அமைக்கத் தவறமாட்டோம் என்று கூறினர் காஞ்சி கலியாண சுந்தரனார், காஞ்சியிலே, ஆர்வமிக்க அண்ணாமலை, பெரியார் சொற்படி நடப்போம், பெற்றே தீருவோம் திராவிட நாட்டை என்று பெருமுழக்கமிட்டார், திருச்சியிலே தீப்பொறி பறக்கும் கண்களுடன், தேனினும் இனிய நடை அழகுடனும், மேனாட்டு சரிதச் சான்றுகளுடனும், டாக்டர் கிருஷ்ணசாமி அழகுறப் பேசி ஆர்வத் தீயைக் கிளறினர், திருப்பத்தூரில் தப்பிசப்பத்தின் முழக்கம், விருதையில் விழா, கடலூரில் களிப்பு, இவை மட்டுமா, இவை நடந்தவைகளிலே சில், நாடு முழுவதிலும் நடந்ததைச் சிறுசிறு குறிப்புகளாக்கி வெளியிடுவதென்றாலே கூட, ஏடுகொள்ளாது—கிராமங்களிலேயும் திராவிடனின்உரிமை முழக்கம் கிளம்பிற்று.

ஜூலை 1ந் தேதி திராவிட நாட்டு

வரலாற்றிலே பொறிக்கப்படவேண்டிய நாளாயிற்று.

மற்ற நாடுகளுக்கு நாம் எந்த விதத்தில் குறைந்தவர்கள்? 1400 மைல்கள் நீளம். நாட்டின் முப்புறமும் கடற்கரையைக் கொண்டவர்கள்; எல்லா விளைபொருள்களையும் கொண்டிருக்கிறோம். தினம் தினம் செய்தி வருகிறது, திராவிட நாட்டில் இரும்பு அகப்படுகிறது, தங்கம் அகப்படுகிறது என்றெல்லாம். வற்றாத நதிகள்! உயரிய நீண்டமலைகள்! மலைகளில் பல பொருள்கள்! என்ன இல்லை எங்களிடம்? ஏன் மறுக்கிறாய்? உலகத்தின் நிலையைத் தெரிந்துகொண்டும் எங்களோடு போராடுகிறாயே, நியாயமா?

என்று பெரியார் சென்னையில் பேசுகையில் கேட்டார். நியாயமா? என்று கேட்கிறார். காங்கிரசிலுள்ள திராவிடர்கள், இதனைச்சற்றுச் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

"தொட்டிலாட்டும் கரம், பேனா பிடிக்கும்கை, பணத்தை எண்ணிப்பார்க்கும்கை, எல்லாம் இனித் திராவிடநாட்டுப் பிரிவினைக்குப்பாடுபடப் பயன்படவேண்டும்" என்று திருச்சியில் பெரியதோர் கூட்டத்திலே, டாக்டர் கிருஷ்ணசாமி கூறினார். திக்கெட்டும் ஜூலை முதல்தேதி கிளம்பின திராவிடர், முழக்கம், கட்சிப்பூசலுக்குரிய சத்தம் அல்ல! நாட்டிலே, நானாவிதமான கட்சிகளாகப் பிரிந்துகொண்டுள்ளவர்களை, ஒரு இலட்சியத்தின்கீழ் கொண்டுவரும் முயற்சி! நாம் இருக்கும் நாடு நமது என்பதை நிலை நாட்டும், பணிபுரிய, நல்லோருக்கெல்லாம் அழைப்பு. ஆச்சாரியாரையே, பெரியார் அழைக்கும் போது, காங்கிரசில்உள்ள திராவிடத் தோழர்களிடம் அவருக்கு, விரோத உணர்ச்சியோ, குரோதஎண்ணமோ ஏற்படுமா? இதைத்தான், ஜூலை முதல் தேதி நடைபெற்ற 'நாள்' மூலம், காங்கிரஸ் திராவிடர்கள் உணர வேண்டுகிறோம். மேலிடத்திலுள்ள காங்கிரஸ்தலைவர்கள் தாங்கள் வாழும் வட்டாரத்தில்தாங்களாகவே தேடிக்கொண்ட தொல்லைகளைத்தாங்கிக்கஷ்டப்படுகிறபோது, அங்கு அதற்காக எடுத்துக்கொள்ளும் சில பலமுயற்சிகளையும், திட்டங்களையும், அவ்விதமான சூழ்நிலையற்ற இங்குள்ள காங்கிரஸ் நண்பர்கள் ஏன், கவனிக்கவேண்டும்? இங்குள்ளபிரச்னையை யல்லவா கவனிக்கவேண்டும்! என்ன பிரச்னை? காங்கிரசாரிடம் நமக்கு ஏகாவது பதவிபற்றிய தகராறா? இல்லையே! சட்டசபைத் தகராறா? அல்லவே! நாம் கூறுவது, நாட்டுக்குப் புதியநிலை—தனி அரசுரிமை—விடுதலை—இதுதானே! ஏன், வம்பு நிறைந்ததும், சுரண்டிப்பிழைக்கும் வித்தையில் கைதேர்ந்ததுமான வடநாட்டுக்கு, திராவிடம்அடிமைப்படவேண்டும்? என்ன காரணம் காட்டமுடியும் அதற்கு?

ஓ! இது தெரியாதா? பாதுகாப்புக்காகத்தான், வடநாடும் தென்னாடும், ஒரு நாடாகிவிடவேண்டுமென்கிறோம், என்று கூறத்தோன்றும்.

மேனாட்டு அரசியல் நூற்புலமை மிக்கவரும், திராவிடஇளைஞர்களின் அணிவகுப்பை அமைத்துவருபவருமான டாக்டர் கிருஷ்ணசாமி தமது திருச்சி—பிரசங்கத்திலே இதற்கு தக்கபதில் அளித்திருக்கிறார்.

"திராவிடம் தனி அரசுரிமையுடன் வாழ்ந்துகொண்டு, அதே போது, வெளிநாட்டு விவகாரவிஷயமாக, மொத்தப்பாதுகாப்புக்காக இந்தியாவின் இதரநாடுகளுடன் ஒன்றுபட்டு வேலை செய்யமுடியுமே! இதிலே என்னதடை? அதோ அமெரிக்காவைப்பார்! தனிநாடு! கீழே உள்ள தென்அமெரிக்காவிலே பல, தனித்தனி நாடுகள். இவைகள், வடஅமெரிக்காவுடன், பாதுகாப்புத்துறையிலே ஒன்றுபட்டு இருக்கின்றனவே. அதுபோலவே நாமும் செய்யமுடியுமே! என்று கூறுகிறார். சரிதத்தைச்சான்று காட்டுகிறார்.

இங்ஙனமே இந்நாள் கொண்டாடப்பட்ட ஒவ்வோரிடத்திலும், திராவிடநாடு திராவிடருக்கே என்பதை கட்சிமாச்சரிய மனப்பான்மையோடு நோக்காமல், நாட்டுக்கு ஏற்றதிட்டமா அல்லவா என்ற எண்ணத்துடன், ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள் என்று அனைவருக்கும் அன்பழைப்பு அனுப்பப்பட்டது. திராவிடநாடு சகல வளங்களும் நிறம்பியது; எனினும் இங்கு தன்னாட்சி இல்லாததால், இயற்கைச் சக்தியும் மங்கி, தொழிலும் தேய்ந்து மக்கள் பாதி வாழ்வினராக உள்ளனர். திராவிடமக்கள் முழுவாழ்வு பெறச் செய்யவேண்டுமென்பதே, திராவிடநாடு திராவிடருக்கேஎன்ற திட்டத்தின் நோக்கம். இந்தத்திட்டத்தை அமுலுக்குக்கொண்டுவருவதன்மூலம், திராவிடமக்களிடையே இன்றுள்ள வறுமையையும் வாட்டத்தையும் போக்கிவிடமுடியும் என்பதற்கு, மறுக்கமுடியாத ஆதாரங்கள் உள்ளன.

இதைக் கவனியாமல் இந்நாடு ஏதோ வளமற்ற நாடுபோலவும், ஆகவேதான் இங்கு மக்கள் முழுவாழ்வு பெறமுடியாமல் போய்விட்டது என்றும் சிலர் எண்ணி என்னசெய்வது இவ்வளவுதான் முடியும்! என்றுகூறி விடுகிறார்கள்.

இந்த "எளியவாழ்க்கை" எனும் தத்துவம், ஏழையைக் காலையில் கூழ் குடிக்கச்சொல்லும், பெட்காபி (Bed Coffee) சீமானின், பிழைக்கும் வழி! திராவிடர்களுக்கு, அவ்விதமாக எளியவாழ்க்கையிலே உழன்று தீரவேண்டியபடி இயற்கை, லோபித்தனம் செய்துவிடவில்லை. மனிதனின் சுயநலமும், முறைகளிலே உள்ள கேடுகளுமே, வறுமைக்குக்காரணம். எளியவாழ்க்கை என்ற இந்த போதனையின்கேட்டினை விளக்கியும், நம் நாடு நல்ல நிலைமையில் இருந்த நாட்களில் நானிலம் மதிக்கத்தக்க நாடாக இருந்ததேயன்றி மேயோக்கள் கேலி செய்யக்கூடிய மண்டலமாக இருந்ததில்லை என்பதை எடுத்துக்காட்டியும் பல நகரங்களிலே மாணவ நண்பர்கள் பேசினர்.

ஜூலை முதல் தேதி, திராவிடநாடு திராவிடருக்கே என்றதிட்டம் வலியுறுத்தப்பட்டது, விளக்கப்பட்டது, ஆதாரங்கள் அனைத்தும் தரப்பட்டன. இவைகள், தேர்தலுக்காக அல்ல! பதவிக்கும் பட்டத்துக்கும் அல்ல, பாராண்ட தமிழன், பண்பிழந்து இன்று தவிக்கிறானே, அவன் மீண்டும் தலை நிமிர்ந்து வாழவழி காணவேண்டுமே என்ற நோக்கத்துக்காகவேயாகும். எனவே, காங்கிரசிலுள்ள திராவிட நண்பர்கள், இனியேனும், இந்தத்திட்டத்தைப்பற்றி தமக்குள்ளாகப்பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டுகிறோம். கூடிக் கலந்து பேசுவதானால், திராவிடர் கழகம் மகிழ்ச்சியுடன் அதனை வரவேற்கும், அந்நாளே நன்னாள் என்பது கழகத்தின்கருத்து. அந்த நாளைக் காண்பதற்காகவே ஜூலை முதல் தேதி, திராவிடநாடு பிரிவினைநாள் கொண்டாடப்பட்டது.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

விட்டு நீங்கவில்லை. எனவே பொருளீட்டுவதற்கு வேறு வழி காணாத அந்தச் சிவ அன்பர், தமக்குப் பழக்கமான சூதாட்டத்தை மேற்கொண்டார். சூதாடுவதில் இவருக்கிணை யாரும் இல்லை என்பது சேக்கிழார் கண்ட உண்மை. சூதாடுவதில் கிடைக்கக்கூடியபொருளைக்கொண்டு அடியவர்களுக்கு அன்னமிடும் 'சிறந்த' செயலை மேற்கொண்ட சிவ அன்பர், பல ஊர்களுக்கும் சென்று சூதாடுவோர் கூடும் இடங்களைக் கண்டு பிடித்து, அவர்களோடு சூதாடுவார். அதனால் கிடைக்கும் பொருளைக்கொண்டு அடியவர்களுக்கு அன்னமிடுவார். சூதாடுவதற்காகக் கும்பகோணம் என்ற ஊருக்குப் போனவர், அங்கேயே சில காலம் தங்கியிருந்து, சூதாடும் தொழிலை மேற்கொண்டார். சூதாட்டத்தில் தமக்கு மாறுபடுவோரைத் தம்முடைய உடைவாளால் குத்திக் கொன்றுவிடுவார். இதனால் அவருக்கு மூர்க்கர் என்ற பெயர் உண்டாவதாயிற்று. இந்த அரும் பெரும் பணியை அயராது செய்து வந்த மூர்க்க நாயனாரைச் சிவன் தம்முடைய திருவடி நீழலில் சேர்த்துக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியும், மக்களுக்குஒழுக்கத்தைக் கற்பித்து, அவர்களை நல்வழிப்படுத்துவதற்காகச் சேக்கிழாரால் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் பெரிய புராணத்தில் காணப்படுவதுதான்.

சூதாடிப் பொருள் ஈட்டிச் சோறு போட்டுப் பிறை சூடியின் அடியவர்களை மகிழ்வித்து, அதனால் அரனாரின் திருவருளைப் பெற்று அவருடைய திருவடி நீழலை அடையும் 'பெரும் பேறு' மத நூல்களின் வாயிலாகக் கிடைக்கும்போது, மத நூல்களை இழித்துப் பேசி, அவற்றில் குறை கண்டு, குற்றஞ் சாட்டி, அவைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்று சிலர் கூறித் திரிகின்றார்களே! இவர்களுடைய அறிவு இருந்தவாறு மிக நன்று நன்று என்று மன்றுளாடியை மறவா அன்பினர் அரற்றுவர் போலும்! சூதாடிப் பொருள் தேடித் தோடுடையான் அடியவர்க்குச் சோறு போடுவதைத் தூய்மையான செயல் என்று கருதும் கருத்தழிந்த கண்ணியர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை என்றபோதிலும், இத்தகைய கதைகளைத் தமக்கு ஆதாரமாக வைத்துக் கொண்டே கடவுளன்பர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் செய்யப்படும் கொடுமைகளை மறைக்கப் பயன்படுத்திக்கொள்ளுகின்றார்கள் என்றபோதிலும், இவற்றால் ஏற்படும் அளவிறந்த தீமைகளைப்பார்க்கும்போது, இத்தகைய கொடுமைகளும், ஒழுக்கத்தை அழிக்கும் முறைகளுமே நிரம்பியுள்ள மத நூல்களால் மக்களினத்துக்கு யாதாயினும் நன்மை உண்டாகுமா என்று எண்ணிப் பார்க்காமல் இருக்க எந்தஅறிவுடையவனும் சம்மதிக்க மாட்டான்.

கடவுள் என்று சொல்லப்படும் கற்பனைக்கும் எட்டாத ஒன்றுக்கு அன்புகாட்டி, அதனுடைய அருளைப் பெறமுடியும் என்ற பேதமையால், கொலையும், களவும்,சூதும்,வஞ்சனையும் செய்யும் கொடுமையை அறிவும் நாகரிகமும் பெற்றஎவருமேபொறுத்துக் கொள்ள மாட்டார்கள். கடவுளின்பெயரைச் சொல்லிக்கொண்டு எந்தக் காரியம் வேண்டுமானாலும் சிறிதும் அச்சமும்-கூச்சமும்-நாணமும்-நாணயமுமின்றிச் செய்யலாம் என்ற ஏற்பாடு நம்முடைய மதநூல்களில் வற்புறுத்தப் பட்டிருப்பதனாலேதான், அத்தகைய மதநூல்களும், அவற்றில் பேசப்படும் கடவுளரும் ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றோம். அஃதன்றி, மக்கட்குத் தேவையான நன்னெறிகளையும் ஒழுக்க மேம்பாட்டினையும், சிறந்த பண்புகளையும் கற்பிக்கும் நூல்கள் எவையாயினும், அவை மதக்கலப்புடையவையாயினும் சரியே, அவற்றை எவரும்-எந்தக் காலத்திலும்-எக்காரணத்தைக் கொண்டும் வெறுக்கவோ ஒழிக்கவோ முன் வர மாட்டார்கள்.

அங்ஙனமன்றி, ஒருவன் தன்னுடைய நலனுக்காக, அதாவது தான் கடவுளுடைய திருவடிப் பேற்றை அடைய வேண்டுமென்ற ஒரே காரணத்தையே அடிப்படையாகக் கொண்டு, அதற்காகப் பிறரைக் கொலை செய்வது, பிறருடைய பொருளைக் கவர்வது, பிறர்மனை புகுவது, சூதாடுவது, வஞ்சிப்பது போன்றகொடுமைகளைச் செய்வதை, அவை, மகேசுவரனுடைய 'மகிமையை' விளக்கும் மத நூல்களில் சொல்லப் படுகின்றன என்ற காரணத்துக்காக எந்த மதியிழந்தவனும் அவற்றை ஒப்புக்கொள்ளவே மாட்டான். அதிலும், இவ்வரலாற்றில் பேசப்படும் மூர்க்கர் என்பவர், தான், சிவனுடைய திருவடியை அடைவதற்காகச் சூதாடியதோடு மட்டும் நில்லாமல், சூதாட்டத்தில் தமக்கு மாறுபடுவோரை எல்லாம், அதாவது சூதாட்டத்தில் வெற்றி பெறுவோரை எல்லாம் தம்முடைய உடைவாளினால் குத்திக் கொலை செய்தார் என்றும் கூறப்படுவதைப் படிக்கும் எந்த அறிவுடையவனும், இந்நிகழ்ச்சியால் மக்கட்கு நன்மையுண்டாகும் என்றோ, இத்தகைய நூல்கள் மக்கட்கு மிகமிக இன்றியமையாதன என்றோ, அன்றி, இத்தகைய நூல்களுக்கு அடிப்படைக் காரண கர்த்தாவான கடவுள் மக்கட்கு நன்னெறி கற்பித்து அவர்களை நல்லொழுக்கத்தில் நிற்கச் செய்பவர் என்றோ கருத முடியுமா?

கொலை செய்யக் கூசாதே! திருடத் தயங்காதே! பிறர் மனை புக மறவாதே! சூதாட்டத்தை விடாதே! வஞ்சிப்பதற்கு அஞ்சாதே! என்பன போன்ற புன்னெறிகள்தானே புராண இதிகாசங்களில் எங்கு பார்த்தாலும் காணப்படுகின்றன. இவையும், மக்களின் அறிவை மழுக்கி மங்கவைக்கும் மூடப் பழக்க வழக்கங்களும் தானே புராண இதிகாசங்கள் நமக்குக் கற்பிக்கும் பாடங்களாக அமைந்துள்ளன. இந்த அழகில், இவற்றையெல்லாம் கடந்து சென்று, அதாவது இவையெல்லாம் பொருளில் புன்மொழிகள் என்று ஒதுக்கித் தள்ளிவிட்டுப், புராண இதிகாசங்களில் உள்ள கலையின்பத்தையும் கவிநயத்தையும் பொறுக்கி எடுத்து நுகர்ந்து இன்புறுக என்று சில புலவர்பெருமக்கள் நமக்குப் புத்தி புகட்ட முன்வருகின்றனரே என்பதை நினைக்கும்போது, ஏனோ இவர்களுக்கு இந்த இடைக் கால மதி ஏற்பட்டதென்று எமக்கு அவர்கள்பால் இரக்கமே உண்டாகின்றது.

15—7—47ல்
நாகை வெளிப்பாளையம்
மணி பகுத்தறிவுக் கழக
3-வது ஆண்டு விழா.
தலைவர் குடந்தை
V. சின்னதம்பி அவர்கள்.
சொற்பொழிவு:
சி. என். அண்ணாத்துரை
E.V.K. சம்பத், K. A. மதியழகன்,

# திராவிட நாடு

காஞ்சி] 6—7—47 [ஞாயிறு

## அன்பழைப்பு

✻

பலம் இல்லை, பத்திரிகை இல்லை, 'பெரியமனுஷாளின்' ஒத்துழைப்பு இல்லை, என்று—கூறிக்கொண்டே, திராவிடர்கழகம் ஏன் வேலைசெய்து கொண்டிருக்கவேண்டும்? சக்தி இல்லாதபோது ஏன் பெரிய பெரிய காரியங்களிலே ஈடுபடவேண்டும்? நிறைவேற்ற முடியாத நிலையிலே, திட்டம் ஏன் பெரிதாகப் போடவேண்டும், என்று காங்கிரஸ் நண்பர்களுக்கு நம்மைப்பற்றி, ஒருகேலி, அவர்கள் கேலிசெய்வதற்கு ஏற்ற விதமாகத்தான், நமக்குப் பலக் குறைவு இருக்கிறது. என்றாலும் பெரிய திட்டந்தான் தீட்டுகிறோம். எந்தத்தைரியத்திலே? நமக்குச்சக்தி இல்லையே தவிற, நாம்தீட்டும் திட்டத்துக்கு—ஜீவசக்தி அமோகம். அந்த உண்மையை உணர்ந்துதான் உழைக்கிறோமே யொழிய, நமக்குள்ள பலத்தைமட்டும் நம்பிஅல்ல. இதை அந்தக்காங்கிரஸ்—நண்பர் உணரவேண்டும். எப்படியோ ஒன்று நாம் ஆரம்பிக்கும் காரியம் எதுவும் வெற்றி பெறாமல் போவதில்லை! தட்டித்தடுமாறி, கேலிக்கும் கேவலத்துக்கும் ஆளாகித்தான் உழல்கிறோம். ஆனால் எப்படியோ ஒன்று, நாம் எடுத்தகாரியம் – வெற்றிகரமாகவே முடிந்து விடுகிறது. அந்த வெற்றிக்குக்காரணம், நாம் எடுத்துக்கொள்ளும் காரியத்திலே உள்ளசக்தி. இதை முன்கூட்டி அறிந்து கொண்டுதான் நமது வெற்றியின் இரகசியம்.

"ஆகிற காரியமா இது! ஐயர் இல்லாமல் கலியாணமாம்!! நடக்குமா நாட்டிலே? எவ்வளவு காலத்துக்கு முன்பு, எத்தகைய சிரேஷ்டர்கள் செய்துவைத்த ஏற்பாடு, சட்ட திட்டம், சடங்கு சம்பிரதாயம். இவைகள் கிள்ளுக்கீரையோ! இவைகளை நீக்கிவிட முடியுமோ? கத்தட்டும் இதுகள்! இதுகளின் காட்டுக் கூச்சலைக்கேட்டு, யார் அந்தப்பூர்வீக முறையை மாற்றுவார்கள்?" என்றுதான் கூறினர்—சீறினர்—பந்தயம் கட்டினர். சர்மான்யர்களல்ல. சகல கலா வல்லவர்களென விருது பெற்றவர்கள். ஆனால், இன்று அப்படிப்பட்ட கலியாணங்கள் — வாழ்க்கை ஒப்பந்தங்கள் — நடைபெறுகின்றன -மிகமிகச் சகஜமாக-பலபல இடங்களிலே.

கோபமும் சாபமும், சபதமும் கண்டனமும், வெற்றி நமக்குக் கிடைப்பதைத் தடுக்கவில்லை. இன்று தமிழகத்திலே ஒரு வீட்டிலே கலியாணப்பேச்சு ஆரம்பமானால்,"ஐயர் வைத்து நடத்தும் கலியாணமா? ஐயர் இல்லாமல் நடத்தும் கலியாணமா?" என்று கேட்பது சகஜமாகி விட்டது.

"நம்மோடு பிறந்து நமக்காக நாட்டிலே பாடுபட்டுவரும் நமது மக்களை சேரியிலே ஒதுக்கிவைத்து, ஆதித்திராவிடர் என்று பேசிச் சீரழித்து, கோயில்களிலே — நுழையவிடாமல் தடுத்துக் கொடுமைபுரியலாமா? இது அன்புடைமையாகுமா? அறிவுடைமை தானாகுமா? அவர்கள் நுழைந்தால், கோயில் கெட்டுவிடும் என்று பேசுவது கோமாளிக் கூத்தல்லவா? அவர்கள் பார்த்தால் 'சாமி' செத்துவிடும் என்று பேசும் சனாதனியின் பேச்சு, உண்மைக்கடவுட் கொள்கைக்கு ஏற்றதாகுமா?" என்றுநாம் சொல்லி வந்தபோது, "கேட்டீர்களோ இந்தக் கெடுமதியாளர்களின் பேச்சை! பஞ்சமனை, சண்டாளனை, நீசனைக் கோயிலிலே விடவேண்டுமாமே! ஆகமங்கள் அநாதிகாலந் தொட்டுக் கூறிவருவது என்ன, இந்த 'அல்பாயுசுகள்' பேசுவது என்ன! வரைமுறை, மேல்கீழ், வருணம், சாஸ்திரம், ஆச்சாரம், எதுவும் கிடையாதோ? யார் ஒப்புவர்? ஜாதியே கூடாதாம். அனைவரும் ஒன்றாம். இப்படிப்பேசுகின்றன, நாஸ்தீகக்கும்பல். இதுகளின் நாக்கல்லவா புழுத்துப்போகும்! நமது தேசமகாஜனங்கள், சாஸ்திர விரோதமான காரியத்துக்குத் துளியும் இடந்தரமாட்டார்கள்" என்று வைதீகர்கள் பேசினர் கோபத்துடன், ஏசினர்— ஆனால் என்ன நடைபெறுகிறது? வடவேங்கடமுதல் இராமேஸ்வரம்வரை, சகல கோயில்களும், திறந்து விடப்பட்டன! அதற்காகத் திருநாள் கொண்டாடப்படுகிறது!

"தாலி அறுத்தவளுக்குக் கலியாணமா....அடசனியனே! வெளியே சொல்லாதே! வெட்கக்கேடு!" என்று கேலி செய்தனர்—இன்று? சர்வ சாதாரணமாகிவிட்டது.

"தேசம்பூராவும் ஒரு மொழி தேவை—இந்திதான் அதற்கு ஏற்றது—எனவே அதைக் கட்டாயமாகக் கற்றாகவேண்டும், என்று நம்முடைய பொதுஜனசர்க்கார் ஒருஉத்திரவு பிறப்பித்தால், அதைப்போய் எதிர்க்கிறார்கள் இந்த 'ஏகாதிபத்ய அடிமைகள்! இதுகளின் கூக்குரலுக்கு யார் செவி சாய்ப்பர். கும்பல் கும்பலாக ஜெயிலுக்குப் போகிறதுகளாம்! போகட்டுமே! அதற்குப் பயந்து கட்டாய இந்தியைரத்து செய்ய முடியுமோ? ஆச்சாரியார், சாமான்யமானவரல்ல! அவர் இதற்கெல்லாம் அஞ்சுபவரல்ல! ஆகட்டும் உன்னால் ஆனதைப்பார் என்று தீர்மானமாகத் தெரிவித்து விட்டார்." என்றுதான், காரசாரமாகப் பேசினர். கடைசியில் என்ன நடந்தது? கட்டாய இந்தி ஒழிந்தது!

"எவ்வளவு ஆணவம்! எவ்வளவு அறியாமை! பொதுமக்களின் அமோகமான ஆதரவைப் பெற்று மந்திரிசபை ஏற்பட்டிருக்கிறது. இதைக்கண்டு கவர்னரும் வைசிராயும் கிலிகொண்டு, நீங்கள் போடும் கோட்டினைத் தாண்டுவதில்லை என்று உறுதிகூறி உள்ளனர். அப்படிப்பட்ட மந்திரிசபையை, இந்த மண்டூகங்கள், சரணாகதி மந்திரிசபை— இன்னும் எத்தனைநாள்? என்று கேள்விகேட்டுக் கேலிசெய்து பத்திரிகைகளிலே எழுதுகின்றனவே. இன்னும் எத்தனைநாளா? ஏ! இங்கிதமற்றவர்களே! உங்கள் கும்பல் பூராவையும் அடியோடு தொலைக்கும் வரையிலே, மந்திரிசபை இருக்கும். தெரியுமா! இன்னும் இருபத்தைந்து வருஷம், விரும்பினால் 50 வருஷம்இருக்கும். அசைக்கக்கூட முடியாது என்று ஆத்திரத்துடன் பேசினர், ஆனால், சரணாகதி மந்திரிசபை இன்று கவிழ்ந்தது என்று நாம் பத்திரிகையில் எழுதவும், பிரிவுபசாரப் பத்திரம் வெளியிடவும் முடிந்தது, முழு ஆயுள் இல்லை அந்த மந்திரிசபைக்கு! இரண்டரை ஆண்டுகள், வாழ்ந்தது; வீழ்ந்தது. தானாகவே தான்! என்றாலும், நம்வாக்கு பொய்த்துவிடவில்லை!!

ரயில்வே ஸ்டேஷன்களிலே உள்ள சாப்பாட்டு விடுதிகளிலே ஏனய்யா, பிராமணர் — பிராமணரல்லாதார் என்று வித்யாசம் காட்டும் போர்டு போடுகிறீர்கள்? ஏன் இந்தஜாதி ஆணவம்? இன்னமுமா இந்த அநாகரிகம் இருக்கவேண்டும் — என்று

கேட்டபோதும், கோபம் கொதித்தது—கேலிச்சித்திரங்கள் தீட்டப்பட்டன—பெரியார்தார் எடுத்து, போர்டுகளை அழிப்பது போல. ஆனால் அதேபோல, போர்டுகள் அழித்துவிடப் பட்டன ஆனால் பெரியார் அல்ல! ரயில்வே அதிகாரிகள் அமர்த்திய ஆட்களால்! ஜாதி வித்யாசத்தைக் காட்டிய போர்டுகள் ஒழிந்தன—இன்று பேதம் கிடையாது.

'தமிழ்நாடு தமிழருக்கே' என்றோம். எலிவளை எலிகளுக்கே என்று கேலிக்குரல் கிளம்பிற்று! ஆனால் இன்று? தமிழ்நாடு தமிழருக்கே என்பது திட்டமாகிவிட்டது.

'பாகிஸ்தான் கோரிக்கையை உதாசீனப்படுத்திப் பயனில்லை. அது எப்படியும் ஏற்பட்டே தீரும்' என்று கூறினபோது, "பெரிய பிரகஸ்பதி தான்! மூடு வாயை! பாகிஸ்தானாவது தருவதாவது! பசுவை வெட்டுவதா? பாரதமாதாவைத் துண்டிப்பதா? பாதகா! கூசாது கூறுகிறாயே! ஒருக்காலும் அது நடவாது" என்று உக்கிரமாகக் கூவினர்—ஆனால் இதோ சகலமும் பிரித்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்-வரவு செலவு—தண்டவாளம்—தபால் தந்தி—பட்டாளம் உட்பட! பாகிஸ்தான் கிடைத்துவிட்டது. போரிலே பிரிட்டன் நிச்சயம் ஜெயிக்கும் என்று கூறினோம். இல்லை, ஜெர்மனிதான் ஜெயிக்கும் என்று வீம்பு பேசினர். பிரிட்டனே ஜெயித்தது!

தம்பி! கதர் சட்டையிலே காரல் மார்க்ஸ் புத்தகத்தை வைத்துக் கொண்டிராதே! இரு கொடி பிடிக்காதே! கூட்டுறவு நிலைக்காது. நேசம் நீடிக்காது" என்று கூறினோம். "செச்சே! உன் பேச்சையா கேட்போம்?" என்றனர்—இன்று? சென்னை கோட்டையிலே, காங்கிரசார்—வேலூர் ஜெயிலிலே கம்யூனிஸ்டு!!

"தொழிலாளர்களே! காங்கிரஸ் பக்தி உங்களுக்கு இருக்குமளவுக்கு, காங்கிரசாருக்குத் தொழிலாளரிடம் அன்பு கிடையாது. ஏன் வீணாக விழலுக்கு நீர் பாய்ச்சுகிறீர்கள். காங்கிரஸ் அதிகாரத்துக்கு வந்ததும், உங்கள்மீதுதான் முதல் தாக்குதல் இருக்கும்" என்று எச்சரித்தோம்—நாம் பயந்ததை விட, அதிகமாக அடக்குமுறை, ஆள்தூக்கு சட்டம் வரையில் சென்றுவிட்டது. தடி மட்டுமல்ல, துப்பாக்கியும் ஜரூராக வேலை செய்தது! தொழிலாளர் இயக்கமே இன்று கலகலத்து விடுமோ என்று அஞ்சத்தக்க நிலை ஏற்பட்டு விட்டது.

ஏகாதிபத்யத்தை எதிர்க்கிறார்களே யொழிய இவர்களின் ஆட்சி, ஏகாதிபத்ய ஆட்சியைவிட மோசமாகிவிடும்—அடக்குமுறை அதிகரிக்கும் என்று கூறினோம்—நாடகங்களுக்குத் தடைஉத்திரவு போடும் அளவுக்குச் சென்றது தர்பார்!

நாம், துவக்குவது ஒவ்வொன்றும் வெற்றி தந்திருக்கிறது—சொன்னது யாவும் சொன்னவண்ணம் நடைபெற்று வருவதையே கண்டிருக்கிறோம். இவ்வளவுக்கும், நாம் வெளிப்படையாகவே கூறுகிறோம், நமக்குப் பண பலமும், வேறு கட்சிகளிலே உள்ள வசதிகளும் கிடையாத நிலைதான்.

இந்தச் சூட்சமத்தைத்தான் கூர்ந்து கவனிக்கும்படி காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறோம். எங்கள் பலத்துக்கு அத்தாட்சியாகக் கொள்ளவேண்டியதில்லை, இந்த வெற்றிகளை—நாங்கள் தீட்டும் திட்டங்களின் திறமைக்கும் தகுதிக்கும் இந்த வெற்றிகள், தக்க சான்றுகளல்லவா? எண்ணிப் பாருங்கள்! எவ்வளவு எதிர்ப்புக்கிடையே, நடைபெறுகிற இயக்கம் இது. இதன்மீது வீசப்படும் கண்டனங்கள் எவ்வளவு! என்றாலும், நாம் எடுத்த காரியம் எதுவும் 'சோடை'யாகப் போகவில்லை. ஏன்? நாம், வீம்புக்காகவோ, வீண்மாச்சரியத்துக்காகவோ, திட்டங்களைத் தீட்டுவதில்லை. தேவையான, தக்க காரணங்கள் உள்ள, பிரச்னைகளைத்தான் கூறுகிறோம். அவைகளை நாம் கூறும் போது, எதிர்ப்பவர்களெல்லாம் கூட, அந்தப் பிரச்னைகளை அலட்சியப்படுத்திவிட முடியாதவிதமான பிரச்னைகள். மக்களின் மனதிலே உலவும் கருத்தை நாம் வெளிப்படுத்துகிறோம்—கொஞ்சம் தெளிவுபடுத்தி—சிறிது திட்டவட்டமாக! எனவேதான், அந்தப் பிரச்னைகள் வெற்றிபெறுகின்றன.

இவ்வளவு வெற்றிப் பட்டியலைக் காட்டிவிட்டுக் கூறுகிறோம், வழக்கம் போல் நாங்கள், திராவிட நாடு திராவிடருக்கே என்ற திட்டத்தைத் தீட்டிக் காட்டுகிறோம் நாட்டு மக்களுக்கு—வழக்கம்போல, எங்களை ஏளனம் செய்துவருகிறீர்கள்—ஆனால் ஒன்று தெரிந்து கொள்ளுங்கள்—வழக்கம்போல் இதிலேயும் வெற்றிதான் அதிலே சந்தேகம் இல்லை—வழக்கம்போலவே இந்த வெற்றிக்கும் காரணம் எமது பலமல்ல, எமது திட்டத்தின் ஜீவசக்திதான் வெற்றிக்குக் காரணம்.

எந்தக் கட்சியின் தளபதிகள் தூர தேசங்கட்கெல்லாம் தூதுவர்களாய்ச் சென்று கொண்டிருக்கிறார்களோ, எந்தக் கட்சியின் பெயரும் புகழும் வாஷிங்டன், இலண்டன் முதலிய தலை நகரங்களிலேயும் பரவி இருக்கிறதோ, எந்தக் கட்சிக்கு, சிற்றரசர்களும் சீமான்களும் பணிந்து விடுகிறார்களோ, எந்தக் கட்சிக்குச் சிந்து பாடுவதை இசைவாணர்கள் தொண்டு என்று கருதுகிறார்களோ, அந்தக் காங்கிரஸ் கட்சியின் பலத்தைத் துணைகொண்டு, திராவிடநாடு திராவிடருக்கே என்ற திட்டத்தை இங்குள்ள காங்கிரஸ் திராவிடர்கள் எதிர்க்கிறார்கள்—இந்தத் திட்டமாவது நடப்பதாவது—பகற்கனவு—என்று ஏளனம் செய்கிறார்கள். ஆனால் இதே பலம் பொருந்திய கட்சியின் எதிர்ப்புகளைத் தாங்கி, வெற்றி பெற்ற கட்சியின் திட்டம், திராவிட நாடு திராவிடருக்கு என்பது. அதை மட்டும் மறவாதீர் என்று அன்பர்கட்குக் கூறுகிறோம்.

திராவிட நாடு திராவிடருக்கே என்னும் திட்டம், விழிப்புற்ற இனத்தின் வீரமுழக்கம். அதன் முழு வலிமையை, இனிவரும் ஆண்டுகள் மிக மிக விளக்கமாக்கிவிடும்-எமது முகாமில் இருந்து மட்டுமல்ல-எதிர்ப்பாளர்களாக இன்றுள்ளவர்களின் முகாம்களிலேயே இருந்துங்கூட. எதிர்காலத்தில் தானா? இன்று மட்டும்? அதோ, எதிர்ப்பாளர்களின் முகாம்களிலே மெள்ள மெள்ளக் கிளம்பும் பேச்சு, எமது செவியில் விழாமலில்லையே!

**முஸ்லீம்கள் கேட்டதற்கு மட்டும் பாகிஸ்தான் கொடுத்துவிட்டு, திராவிடர்கள் கேட்கும்போது, இல்லை, கூடாது, என்று கூறுவது தான் பொருத்தமாக எனக்குத் தோன்றவில்லை. இரண்டு பேருக்கும் மறுத்து விட்டிருக்க வேண்டும். ஒருவருக்குக் கொடுத்து மற்றொருவருக்கு மறுப்பது—அவ்வளவு சரியில்லை—நியாயமில்லை.**

**ஒரு விதத்திலே பார்க்கும் போது, அவர்கள் கூறுவதிலே அர்த்தமிருக்கிறது. காஷ்மீர், நேப்பாள், பூடான், இப்படிப்பட்ட**

‘துண்டுகள்’ தனி அரசு நடத்தும் போது, ஒரு பெரிய மாகாணத்தின் அளவுள்ள இடம், தனி அரசு ஏன் நடத்த முடியாது?

இந்த மார்வாடி குஜராத்திகள் செய்கிற தொல்லை, சகிக்கத்தானப்பா முடியவில்லை. இதுகளை இங்கே, நமது நாட்டிலே வர விடுவதே தவறுதான். இந்தத் தொல்லையைப் பார்க்கும் போது, அவர்கள் கூறும் திராவிட நாடு திட்டம் அவசியமானது என்றே தோன்றுகிறது.

வட நாட்டான் வாழ்கிறான் கோடி கட்டிக்கொண்டு, இங்கே நம்மவர்களோ வாழ வழியின்றி, வெளி நாடு போகிறார்கள் கூலிகளாக. இந்தக் கோடுமை என்றுதான் ஒழியுமோ தெரியவில்லை. திராவிட நாடு திராவிடருக்கு என்று கூறுகிறார்களே, அந்தநிலை ஏற்பட்டால் தானே?

இவ்விதமான பேச்சுகள் கிளம்பாத காங்கிரஸ் கமிட்டிகள் இல்லை என்பதை நாமறிவோம். காங்கிரஸ் கமிட்டிகள் மட்டுமா! தேசியப் பத்திரிகாலயங்கள் விதிவிலக்கா? அங்கும் இதே பேச்சுதான்! பட்டி தொட்டியிலிருந்து பட்டாளம் வரையிலே இருக்கிறது இந்தப் பேச்சு. பர்மா, பினாங்கு, சிங்கப்பூர், மோரிஸ், நெட்டால், சிலோன், முதலிய நாடுகளிலேயும் இதே பேச்சு. இது இன்று எங்கும் நிறை நாதம்—ஆனால் கொஞ்சம் ‘சுருதி’ மட்டு! தக்க பக்க வாத்யம் இல்லை!!

எனவேதான், இது வரை எடுத்துக் கூறின திட்டங்கள் எவையும் தோற்றது கிடையாது என்ற ஆதாரத்தையும் காட்டி, இம்முறையும் வழக்கம் போல, ஏளனம் செய்து கொண்டும் வீண் காலம் போக்காமல், இந்தத் திட்டத்தை ஆதரிக்க வேண்டுமென்று காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

பலம் வாய்ந்த மத்திய சர்க்கார் வேண்டும் என்று பேசப்படுகிறது.

இதற்காக வேண்டி, ஏற்கனவே பாகிஸ்தான் என்ற ஒரு பிரிவு ஏற்பட்டதுடன், இனியும் திராவிடஸ்தான் என்றோர் பிரிவும் ஏற்படுமானால், நாடு, மதிப்பையும் பலத்தையும் இழந்து விடும், என்று சோகரசத்துடன் கூடிய கிலி கிளப்பப்படுகிறது.

பலம்! மதிப்பு! யாருக்கு பலம்? யாருக்கு மதிப்பு? அந்த மதிப்பின், உட்பொருள் என்ன? இவைகளைப் புரிந்து கொண்டால் போதும், அந்த வாதங்களின் போலித் தன்மை வெட்ட வெளிச்சமாகிவிடும்.

பாகிஸ்தானை— மிரட்டுவதற்காக, பரந்த பூபாகம் தம்மிடம் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். இது தவறான கொள்கை மட்டுமல்ல, உலகிலே எங்குமே கைவிடப்பட்டு விட்ட கொள்கையுமாகும். பரந்து விரிந்து இருப்பது, ஒரு நாட்டின் பலத்துக்குப் போதாது! அணுகுண்டு கிடைக்கும் வரையிலே, சின்னஞ் சிறு ஜப்பான்தான், மிகப் பெரிய சீனாவை, காலின் கீழ் போட்டுத் துவைத்துக்—கொண்டு இருந்தது. பூபாகத்தின் பெரிய அளவு, ஒரு பலத்தையும் தரவில்லை. இந்திய பூபாகத்தின் தலைக்கு மேலே உட்கார்ந்து கொண்டுள்ள நேப்பாளம், பரந்து விரிந்து உள்ள இடமா? நமது ஜில்லாக்களிலே ஒன்றுபோன்ற அளவுள்ளது! பர்மா! பரந்து விரிந்த இடமா? போர்ச்சுகல்? எவ்வளவு சின்ன அளவு? ஸ்பெயினால் கூட அதை விழுங்க முடியவில்லையே! எந்த நாடும், தன் பலத்தை, அதன் பூபாகத்தின் அளவைக் காட்டி, நிலைநாட்டிக் கொண்டதுமில்லை—முடியவும் முடியாது! அதுபோலவே, நாடு சிறிய அளவாக இருக்கும் காரணத்தால், உலகிலே அந்த நாட்டுக்கு மதிப்பு ஏற்படாது என்றுகூறுவதும் அர்த்தமற்ற வாதம்!

அனால் இவைகளுக்கு உட்பொருள் இல்லாமற் போகவில்லை.

வெளிநாடுகளிலே, வடநாட்டு வியாபாரக் கோமான்கள் ‘மதிப்பு’ வேண்டுமென்று இன்று அலைகிறார்கள். வியாபார ஒப்பந்தங்கள், வெள்ளையருடனும், அமெரிக்கருடனும் செய்துகொள்கிறார்கள். இந்த ஒப்பந்தத்துக்கு, தங்களிடம் உள்ள நாடு மிகப் பெரியது, இரண்டோர் மாகாணங்கள் மட்டுமே பிரிந்துபோய்விட்டன, என்று பேசினால் ‘மதிப்பு’ வரும் என்று எண்ணுகிறார்கள் இந்த முதலாளிகளின் இலாபவேட்டைக்கு உள்நாட்டிலே விரிந்த இடமும், வெளிநாட்டிலே வியாபார ஒப்பந்தமும் தேவை! அவர்களின் இரும்புப் பெட்டி நிரம்புவதற்காக, இங்கு நாம், திராவிடத்தைத் தேயவைக்க வேண்டுமாம், எடுப்பார் கைப்பாவையாக்க வேண்டுமாம்! இது நியாயமாகுமா? வடநாட்டு வணிக வேந்தர்களின் பேராசைக்கு, திராவிடத்தைப் பலியிடுவதுதான், நாட்டுப் பற்றா என்று கேட்கிறோம்.

**பலம் வாய்ந்த மத்திய சர்க்கார்** வேண்டும், என்ற திட்டம் இன்று பலரால் வலியுறுத்தப்பட்டு வருகிறது. டாக்டர் C. R. ரெட்டி, சர். சண்முகம் ஆகியோர், இந்தத் திட்டத்துக்குத் தமது ஆதரவைத் தருகின்றனர்.

பலம் வாய்ந்த மத்திய சர்க்கார் என்ற திட்டம், வல்லமை மிக்க, சர்வ சக்தி வாய்ந்த மன்னன் வேண்டும், மன்னன் முன்பு மற்றவர்கள் சாமான்யர்கள், எல்லா அதிகாரத்தின் இருப்பிடமும் பிறப்பிடமும் மன்னரே, என்ற, முன்னாள் அரசியல் கருத்தின் பின் சந்ததி போன்றது. ஜனநாயகம் வளர வளர, மன்னரின் அளவுகடந்த அதிகாரம் குறைக்கப்பட்டது, வெறும் சின்னமாகிவிட்டது. அதுபோலவே, பலம் வாய்ந்த மத்திய சர்க்கார் என்ற கொள்கையும், ஜனநாயகக் கோட்பாடு வளர வளர, தளர்ந்துபோக வேண்டியது.

பிரிட்டிஷ் ஆட்சியின் துவக்கத்தின் போது, மத்திய சர்க்கார் பலம் வாய்ந்ததாகத்தான் இருந்தது! மாகாணங்கள், கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருவனவாகத்தான் இருந்தன. இந்நிலையின் பயனாக, மாகாணங்கள், வளர்ச்சி அடைய முடியாமல் இருந்ததால், பல நிபுணர்கள் கிளர்ச்சி செய்து, மாகாணங்களுக்கு மேலும் மேலும் அதிகாரம் வேண்டும் என்று கிளர்ச்சி செய்து, பெற்றனர். மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்த கால முதற்கொண்டு நேற்று 1935-ம் வருஷச் சட்டம் வரையிலே கூர்ந்து நோக்கினால், மத்திய சர்க்காரிடம் குவித்து வைக்கப்பட்டிருந்த அதிகாரங்களை, மாகாணங்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பறித்து, தங்கள் அதிகாரத்தை அதிகப்படுத்திக்கொள்ள நடைபெற்ற உரிமைப் போராட்டமாகவே தெரியும். இந்தப் போரின் இறுதியில் கிடைத்ததுதான், மாகாண சுயாட்சி. இப்போது இந்த மாகாண சுயாட்சிக்கும் முடிவு கட்டி, மீண்டும், பழயபடி, மத்திய சர்க்காரிடம் சகல அதிகாரத்தையும் ஒப்படைக்கும், காரியம் நடைபெறுகிறது. இது ஜனநாயகக் கொள்கைக்கு முற்றிலும் முரண்—மாகாண நலன்களுக்குக் கேடு.

பலம் வாய்ந்த மத்திய சர்க்கார், அமுல் நடத்த வழியே தவிற, அன்னிய நாடுகளை மிரட்டும் திட்டமாகுமே தவிற, வியாபாரக் கோமான்களுக்கு இலாப வேட்டைக் காட்டினைப் பெரிதாக்கும் திட்டமே தவிற, இந்திய பூபாகத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவோ, வளத்தைப் பெருக்கவோ, உரிமையை அதிகரிக்கச் செய்யவோ, உதவாது. எனவே,

(12ம் பக்கம் பார்க்க)

# ★ மூதறிஞர் கருத்துரை ★

## திராவிடநாடு தனி அரசாக வேண்டும்

சென்றகிழமை, திராவிட ஆராய்ச்சி உலகுக்குப் பெருநஷ்டம். மூதறிஞர் பூரணலிங்கனார் அவர்கள் மறைந்தார். பழுத்த பழம்தான் என்றபோதிலும், அவருடைய அனுபவ யோசனைகளை நாம் பெறுவது எவ்வளவோ நன்மை தரக்கூடியதாக இருந்து வந்தது. திராவிடநாட்டின் தலை சிறந்த அறிஞரை நாம் இழந்துவிட்டோம். தமிழறிவுடன் ஆங்கில அறிவும், உரைநடையுடன் கவிதை இயற்றும் திறனும், எல்லாவற்றையும்விட, உளம்நிறைந்த இனப்பற்றும் கொண்டவர், மறைந்த முதியவர். திராவிடநாடு திராவிடருக்கு, என்றதிட்டத்தை நமதுகழகம்வலியுறுத்தத்தொடங்கிய உடனே, மூதறிஞர் பூரணலிங்கனார், அதனைஆதரித்ததுடன் திட்டத்துக்கு அரண் அளிப்பது போன்ற அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தீட்டினார்.

1940ம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பிரிவினை மாநாட்டின்போது, அவர் அனுப்பி வைத்த அரிய கருத்துரையை இங்கு வெளியிட்டிருக்கிறோம், எத்தகைய அறிவாளரை நாம் இழந்துவிட்டோம் என்பதைத் திராவிடர் உணருவதற்காக. மறைந்த மூதறிஞரின் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

காஞ்சியில் 1940 ஜுன் 2-ந்தேதி நடைபெற்ற சென்னைமாகாண பிரிவினை மாநாட்டிற்கு தம்மால் நேரில் வரமுடியாது போனதினால் தோழர் எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை, பி. ஏ. எல். டி., அவர்கள் அம் மாநாட்டினரை வாசிக்கும்படி எழுதியனுப்பிய செய்தி வருமாறு:—

அன்பார்ந்த திராவிட சகோதரர்களே!

என்னால் நேரில்வரமுடியாமைக்கு மன்னிக்கக்கோருகிறேன். எனக்கு வயதோ அதிகமாய்விட்டது. அதனால் நீண்டபிரயாணம் செய்வது கஷ்டமாயிருக்கிறது. உங்களுடனிருந்து உங்களது உற்சாகத்தை நேரில் கண்டறிய முடியாமல்போனதற்கு வருந்துகிறேன்.

தொண்டை மண்டலத்தின் தலை நகரமாகிய இந்நகரத்திலே நீங்கள் இன்று (ஜுன் 2ந்தேதி) கூடியிருக்கிறீர்கள்.

நாமெல்லாம் ஹிந்துக்கள் அல்ல, திராவிடர்களே! என்று நான் சொல்வதை விருப்பு வெறுப்பு இல்லாமல் எண்ணிப்பார்க்க உங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஹிந்துக்கள் என்பவர்கள் ஆரியர்கள். சிந்து நதியின் 7 உபநதிகளின் கரையோரங்களில் குடியேறிவர்கள் "சப்த ஹிந்துக்கள்" என்று அழைக்கப்பட்டனர்.

திராவிடர்களாகிய நாம் இக்கண்டத்தின் தெற்குக்கோடியில் வசித்து வந்தோம். நம் முன்னோர்கள்தான் உலகில் முதன் முதலில் தோன்றிய மக்கள் எனக்கருதப்படுகின்றனர்.

ஆதியில் 'இந்து' என்ற சொல் கள்ளத்தனமாக குடியேறிய ஆரிய வர்க்கத்தினரை இழிவாகக் குறிப்பதாயிருந்துவந்தது.

பின்னால் வேதத்தையும் வேத முறைகளையும் பின்பற்றுகிறவர்கள் அப்பெயரால் அழைக்கப்படலாயினர்.

அதன்பின்னர் வடஇந்தியா முழுவதிலும் ஆரியர்கள்குடியேறிவிடவே அவர்களையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் குறிக்கும் சொல்லாக அது விளங்கிற்று.

பின்னால் அவர்கள் தெற்கே புக ஆரம்பிக்கவே, முஸ்லிம் மதத்தையோ அல்லது வேறு எம்மதத்தையோ சாராத ஒரு கலப்பான மக்களை குறிக்கும்சொல்லாகவிளங்கலாயிற்று.

திராவிடர்களாகிய நாமோ நாகரீகமடைந்தவர்கள்; தமிழ்மயமாக விளங்கினோம். ஆனால் இவ்வன்னியர்களோ, சமஸ்கிருதப் பிரியர்கள், மாட்டு இறைச்சியை உண்டும், மதுபானங்களை மிதமிஞ்சி பருகியும் வந்தார்கள். இத்தகையவர்களை நீங்கள் வரவேற்று உபசரித்து வந்தீர்கள்.

நாம் காட்டிய மரியாதைக்கும் அன்பிற்கும், உபசரணைக்கும் அவர்கள் காட்டிய நன்றி நம்மை சூத்திரர்கள், நிழல் படக்கூடாதவர்கள், தீண்டப்படக்கூடாதவர்கள் என்றுஅழைத்ததுதான். அத்துடன் நின்றுவிடவில்லை அவர்கள் நம்மை மனித சமுகத்திலே கீழானவர்கள் எனவும் கேவலமாகவும் மதிக்கலாயினர்.

நம்முடைய கலையையும், நாகரீகத்தையும், பழமையையும் அவர்களுடைய கலை, நாகரீகம் பழமையுமொத்திட்டுப்பார்த்தால் அவர்களுடைய நாகரிகம் முதலியன எவ்வளவு அநாகரிகமானது, நீசத்தனமானது என்பது விளங்கும்.

ஜாதி என்பதே இன்னதென்றறியாதிருந்த-சமத்துவமாக விளங்கிய தென்னாட்டிலே தொழிலின் பேரால் மக்கள் அழைக்கப்பட்டிருந்த நாட்டிலேஜாதிப்பாகுபாடு ஆரியர்களால் புகுத்தப்பட்டது. பிராமணர்கள் எல்லோருக்கும் மேலானவர்கள் என்றும் தூய்மையுடையவர்கள் என்றும் சொல்லிக்கொண்டனர்.

நான்கு வருணத்தாரும் உயர் ஜாதியல்லாதவர்களும் 'இந்துக்கள்' என அழைக்கப்படலாயினர்.

வேதங்கள் படிப்பதற்கு அனுமதிக்கப்படாவிட்டாலும் எல்லாவர்ணத்தாரும் எல்லா மதத்தினரும் மனுதர்மச்சட்டப்படி கடுமையாக தண்டிக்கப்படுகின்றனர்.

திராவிடர்களை அவர்கள் எவ்வளவோ கொடுமைப்படுத்தியும் இவர்களுடைய பழக்கவழக்கங்களையும் கடவுள் வழிபாட்டையும் அவர்கள் பின்பற்றியும் திராவிடர்களுடைய கலை நாகரிகம் அந்நியஆதிக்கத்தினால் அழிக்கப்படவில்லை.

திராவிடர்களை நசுக்க சாதாரண வழிகளால் முடியாதென உணர்ந்த அவர்கள் பிரித்தாளும் தந்திரத்தைக் கையாளலானார்கள்.

அம்முறையை அவர்கள் (ஆரியர்கள்) கையாள்வதை இன்றும் நீங்கள் பார்க்கலாம். அதன் காரணமாக நமது சமுகத்தின் ஒற்றுமை எவ்வளவு சீர்குலைந்திருக்கிறதென்பதையும் நீங்கள் நன்கு அறிந்து கொள்ளலாம்.

நம்முடைய பழைய நிலையை, உன்னத நிலையை நீங்கள் மீண்டும் அடைய விரும்பினால், முதலில் சமய சஞ்சீவினியின்னலையினின்று விடுதலை யடையுங்கள். அவர்களின் தொடர்பை அடியுடன் அறுத்து விட வேண்டும்.

★

10-ம் பக்கத் தொடர்ச்சி

மேதாவிகள் மக்களின் நலத்தையும், தாங்கள் பிறந்த மண்ணின் நலத்தையும் முன்னால் நிறுத்திப் பார்ப்பார்களானால், பலம் வாய்ந்த மத்திய சர்க்கார் என்ற திட்டம், உண்மையிலே நமது உரிமையைப் பறிக்கும் சூட்சி என்பதை உணருவர்.

அவசியமற்றதும், ஜனநாயகத்துக்கு முரணானதும், நாட்டுக்கு நலிவு தருவதும், ஒரு சில, விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய கோடீஸ்வரர்களின் பேராசைக்கு மட்டுமே பயன்படக் கூடியதுமான பலம் வாய்ந்த மத்திய சர்க்கார், நமக்குத் தேவையுமல்ல—நன்மையும் பயக்காது.

வேறு சிலர் உளர். அவர்கள் மாகாணங்களுக்குத்தான் சகல அதிகாரமும் இருக்கிறது, ஏதோ ஒருசில, குறிப்பிட்ட, பொது நலனுக்கு உகந்த, துறைகளிலே மட்டுமே மத்திய சர்க்காருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது, என்று கூறி, பொங்கும் பாலைச் சிறிது தண்ணீர் தெளித்து அடக்குவது போல், பேசிப் பார்க்கிறார்கள். அவர்களுடைய ஆசை அது, ஆனால் நிலைமையோ முற்றிலும் வேறு.

சின்னாட்களுக்கு முன்பு, செங்கற்பட்டிலே ஓர் பொதுக் கூட்டத்திலே தினமணி ஆசிரியர், பலம் வாய்ந்த மத்திய சர்க்காரின் அவசியத்தைப் பற்றிப் பேச அதே கூட்டத்திலே, டாக்டர் சுப்பராயன், அந்த முறை சரியல்லவென்றும், மாகாணங்களுக்கே முக்கியமான, அதிகப்படியான அதிகாரங்கள் இருக்கவேண்டுமென்றும் வலியுறுத்திப் பேசினார்—பேசிக்கொண்டே வந்தவர், என்ன எண்ணிக்கொண்டாரோ தெரியவில்லை, மாகாணங்களுக்குத் தான் அதிகமான அதிகாரம் தேவை என்று நான் கூறுவதால், நான் திராவிடஸ்தான் இயக்கக்காரன் என்று எண்ணி விடாதீர்கள் என்று கூறினாராம், பாபம்! ஆசைக்கும் அச்சத்துக்கும் இடையே அன்பர் ஊசலாடுகிறார். அது போல் பலர். அவர்களெல்லாம் மாகாணங்களுக்கே சகல அதிகாரமும் இருக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள். ஆனால், A. தொகுதி அரசியலில், தீட்டப்பட்டு வரும் சட்ட திட்டமோ, அவர்களின் ஆசையை மட்டந்தட்டுகிறது. இதுவரை இருந்து வந்ததைவிட, இனி மாகாணங்களின் அதிகாரம் குறையும். ஒரு பெரிய ஜில்லா போர்டு போன்ற நிலைமைக்கு மாகாணம் வந்து சேரும். எதற்கும் வடக்கு நோக்கித் தவம் கிடந்தாக வேண்டிய நிலைமை ஏற்படப்போகிறது

பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், வியாபாரம், என்று பொதுவாகச் சில சொற்களைக் குறித்துக் கொண்டு, இவைகளிலே மட்டுந்தான் மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கப் போகிறது என்று, கூறுகிறார்கள்—பிறரை மயக்கமட்டுமல்ல—தாங்களே கூட மாறுகிறார்கள்.

இந்தச் சொற்களுக்குத் தரப்பட்டுள்ள வியாக்யானம், விபரீதமான முறைக்குச் சென்று விட்டது. மாகாணத்தின் உயிர் நாடிகளை எல்லாம் மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்கும் திட்டம் தயாராகிறது.

இந்தச் சூட்சமத்தை மக்கள் அறிந்து கொள்ள முடியாதபடி, பிரச்சாரப் புகைப் படலம் போடப்படுகிறது. எனவேதான், மக்கள், பரந்தநாடு, பலம் வாய்ந்த மத்ய சர்க்கார், உலகிலே மதிப்பு, என்ற மயக்க மொழியை நம்புகிறார்கள்; நாம் கூறும், திராவிடநாடு திராவிடருக்கே என்ற உரிமை முரசொலி அவர்களுக்கு விளங்கவில்லை. ஆனாலும் நாம் ஆயாசப்படவில்லை—அயரப்போவதுமில்லை—அவர்களிடம் உண்மையை உரைத்து வருவோம், இன்று அலட்சியப்படுத்தப்படும் உண்மை, ஓர் நாள் அதன் உயரிய, உரிய இடத்தைப் பெறும்—வெற்றி நிச்சயம் உண்டு. இந்த நம்பிக்கை ஏன் நமக்கு ஏற்படுகிறது என்பதற்கான ஆதாரங்களையும் விளக்கினோம். கூடிப்பணி புரிவோம் வாரீர் என்று அழைக்கிறோம். எங்ஙனம் கடைசீ நிமிஷம் வரையில், பாகிஸ்தானை எதிர்த்து, பத்திரிகைகள் பலமாக எழுதி வந்தனவோ, மட்டரகப் பேச்சாளர்கள் ஆபாசமாகத் தாக்கி வந்தனரோ, அதுபோலவேதான், திராவிடநாடு திராவிடருக்கே என்ற திட்டத்தையும் ஆபாசமாக, பலமாகக் கண்டிப்பார்கள்—கடைசீ நிமிஷம் வரையில்—வெற்றி நமது வாயற்படியில் வந்து நிற்கும் வரை. அது தான் வழக்கமாகிவிட்டது. மக்கள் வீணாக, அந்த இதழ்களின் பிரசார முறையிலே மயங்காது, தாங்களே சிந்தித்து உண்மையை உணருவார்களானால், திராவிட நாடு திராவிடருக்கே என்ற திட்டம், வெற்றி பெற்றே தீரும் என்பதையும் அறிவார்கள், அந்த வெற்றிக்காக அவர்களே பாடுபடவும் முன்வருவார்கள். அதற்க்க, இந்த அன்பழைப்பு! சேரவாரீர் நாட்டினரே! நமது சொந்த நாட்டை மீட்டிட வாரீர்—உரிமையை நிலை நாட்டிட வாரீர்—என்று அன்புடன், நம்பிக்கையுடன், உடன் பிறந்தோர் என்ற பாத்யதையுடன், அழைக்கிறோம். அலட்சியத்துக்கு ஆளான நாங்கள், கேவலப்படுத்தப்பட்ட நாங்கள், எதிர்ப்பு பலவற்றுக்கிடையே வேலை செய்த நாங்கள், இதுவரையில் எடுத்த காரியம் அவ்வளவிலும் வெற்றி பெற்றிருக்கிறோம் என்ற சான்று காட்டி அழைக்கிறோம், சேர வாரீர் தோழர்களே! திராவிட நாடு திராவிடருக்காக்குவோம், வாரீர்!

✲

## ஆடு ராட்டே!
## ஆனால் இங்கு!

ஆடு ராட்டே! சுழன்று ஆடு ராட்டே! — என்ற கீதம், நம் நாட்டுக் காங்கிரஸ் நண்பர்களுக்கு ரொம்ப ரொம்ப' ப்பிரியம். வீட்டுக்கு வீடு ராட்டை ஆடவேண்டும் என்பது அவர்களின் விருப்பம்—வேலைத்திட்டம். இந்த வேலைத்திட்டம் போடும் அளவுக்கு ராட்டையிலே அவர்களுக்கு ஆர்வம் உண்டானதற்குக் காரணம், காந்தியாரின் போதனை. ஆனால் அந்தக் காந்தியாரின் வாசஸ்தலமாகவும், பிரதம சீடர்களின் இடமாகவும் உள்ள, வடநாடு, எவ்விதம் இருக்கிறது? அங்கு ஆலையரசர்கள் கொழுக்கிறார்கள் என்று பன்முறை எடுத்துக் காட்டினோம். அது பழங்கதையாகி விடவில்லை. புதிய அத்யாயம் இதோ!

பம்பாயிலுள்ள முதலாளிமார்கள் ஒரு வெளி நாட்டுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டிருக்கிறார்கள்—கதர் திட்டத்துக்காகவா?—இல்லை—அதைக் கருவறுக்க, வடநாட்டில் கருவறுக்க! ஒரு கோடி ரூபாய் விலையுள்ள, நவீன ஆலை இயந்திரங்களை, 1948, ஜுலையிலிருந்து மூன்று ஆண்டுகள், தங்களுக்கு அனுப்பி கொடுக்கும்படி, ரோட்ஸ் தீவிலுள்ள ஒரு கம்பெனியிடம், பம்பாய் முதலாளிகள் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் கம்பெனி, அமெரிக்கருக்குச் சொந்தமானது. நவீன யந்திரங்கள் அங்கே! ஆலைகளை அதிகப்படுத்த! ஒரு கோடி ரூபாய்க்கு ஆலைச் சாமான் வாங்குகிறார்கள், ஏற்கனவே ஆலையிலே ஆதிக்கம் பெற்றுள்ள பம்பாய் முதலாளிகள். இங்கோ நமது காங்கிரஸ் நண்பர்களும், மந்திரிகளும் ஆடு ராட்டே! சுழன்று ஆடு ராட்டே! என்று பாடுகிறார்கள்.!! வடநாட்டில் ஆலை! இங்கு ராட்டை!!

—

நகைச்சுவை அரசர் N. S. கிருஷ்ணன் அவர்களின் உருவப் படம் அழகிய ஆர்ட்போர்டு அட்டையில் அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயுள்ளது. 100 காப்பிகள்

ரூ. 8—0—0

வேண்டுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

K. T. S. மணி
13, ராஜவீதி,
பெரியகாஞ்சிபுரம்.

# சமுதாயத்தில் புதிய அமைப்பு வேண்டும்.

—※—

29—6—47-ல் கோவில்பட்டியில் நடைபெற்ற நாடார்குலவாலிபர் மாநாட்டுக்குத் தலைமைவகித்த கும்பகோணம் தோழர் V. சின்னத்தம்பி அவர்கள் ஆற்றியசொற்பொழிவு கீழே தரப்பட்டுள்ளது.

## வகுப்புக் கழகங்கள் அவசியமா?

ஜாதிப் பூசல்களும், சமயச் சண்டைகளும் நாட்டில் ஒழியவேண்டும், பிறப்பினால் காட்டப்படும் பேதங்களும், அதன்மீது கட்டப்பட்ட ஜாதிப் பிரிவுகளும், ஒழிக்கப்பட்டால்தான் சமுகம் தழைக்கும் என்ற கருத்துக்களைப் பரப்பிவரும் கட்சியை நான் சார்ந்தவன். ஜாதிப் பிரிவற்ற, எத்துறையிலும் பேதங்களற்ற புதிய சமுகம் அமைக்கப்படும் என்ற நம்பிக்கையுடையவன்.

அவ்வாறு ஜாதிப்பிரிவுகளை அழிக்கப் பாடுபடும் கட்சியிலும், நம்பிக்கையிலும் உழைத்துவரும் நான், நாடார் வாலிபர் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டது சிலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கலாம்.

"சண்டை கூடாது சமாதானம் நிலவ வேண்டும்" என்று கூறுகிறோம். அதற்காகப் பாடுபடுகிறோம். ஆனால், எப்படியோ சண்டைமூண்டு விடுகிறது. அதிகார வெறி பிடித்த நாடு, ஆயுத பலத்தால் பலமற்ற நாட்டைத் தாக்குகிறது. அப்பொழுது அமைதி விரும்புபவன், ஆயுதமெடுத்துத்தான் ஆகவேண்டும். ஆயுத பலமற்ற நாட்டை ஒன்று திரட்டினால்தான் அமைதி நிலவ முடியும். அமைதிப் பேச்சுக்கு அர்த்தமுண்டு. நாடார் வகுப்பினரும் அத்தகைய பலமற்ற நாட்டை ஒத்திருக்கின்றனர். மற்ற வகுப்பினரின் தாக்குதலுக்குள்ளாகிச் சமுகத்தில் கல்வித்துறையில் முற்போக்கற்ற நிலையில் நாடார் வகுப்பு இருக்கிறது. இந்த உண்மையை உணர்ந்து நாடார் வகுப்பினரை முன்னேற்றுவது, ஜாதிப்பிரிவுகளை வளர்ப்பதாக ஆகாது. மாறாக, சமுகத்தில் ஒரு சம நிலைமையை உண்டாக்குகிறோம். நம்முடைய முயற்சி, துவண்டு கிடக்கும் வகுப்பை, முன்னணிக்குத் தள்ளுவதாகும்.

## வகுப்புகள் ஒன்றுபடும் மூல நோக்கத்தைக் கைவிட்டுவிடக் கூடாது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ள நான் மகிழ்ச்சியடைவதற்கு மற்றொரு காரணம், இங்கிருக்கும் அனைவரும் வாலிபர்கள் என்பதாகும். அதை உணர்கிறேன் நானும் ஒரு வாலிபன் என்ற காரணத்தால். இதற்குமுன் கூட்டப்பட்ட மாநாடுகளுக்கும், இந்த வாலிபர் மாநாட்டிற்கும் பெரிய வித்தியாசமிருக்கிறது, ஆண்டுக்கொருமுறை வகுப்பு மாநாடுகள் கூடும். வகுப்பு முன்னேற்றத்தைப் பற்றிய பேச்சைவிட, பழம் பெருமையே பெரிதும் பேசப்படும். சூரிய குலம், சந்திர குலம், இந்திர குலம் போன்ற பயனில்லாத பழம் பெருமைக்கு முதலிடம் கொடுக்கப்படும். பெயரில் ஏற்படும் மாற்றமும், பெருமையும் மாநாட்டுத் தீர்மானங்களாகத் திகழும். அத்துடன் மாநாடு முடியும்.

## வாலிபர்கள் எந்த இயக்கத்திலும் ஈட்டி முனை போன்றவர்கள்.

ஒரு மாநாட்டிற்கும், மற்றொன்றிற்கும் இடைப்பட்ட காலத்தில் நடந்த உருப்படியான காரியம் அதிகம் இருக்காது. இந்த மாநாடும் அந்த முறையைத் தொடர்ந்து நடத்தாது என்று நம்புகிறேன், இது வாலிபர் மாநாடாக இருப்பதால். வாலிபரே சமுகத்தின் முதுகெலும்பு போன்றவர்கள். முன்னேற்றப் பாதையில் செல்லும் முன்னணிப் படையினர். சமுக, அரசியல் இயக்கங்களைத் தாங்கி நிற்பவர்கள். எண்ணற்ற வாலிபர்களைப் பலி கொடுத்த பின்தான், ஒவ்வொரு போராட்டமும் வெற்றிபெற்றிருக்கிறது. ஒவ்வொரு அரசியல் கட்சியின் பலமும் அதனைச் சார்ந்திருக்கும் வாலிபர்களின் திறமையைப் பொறுத்திருக்கிறது. அரசியல் களத்தில் வாலிபர்களின் வேலை, நாட்டைப் பொறுத்தவரை ஓரளவுக்கு வெற்றிபெற்றிருக்கிறது. நான் இங்கு அழைப்பது அரசியல் போர்க்களத்திற்கல்ல. சமுக உலைக்களத்திற்கு.

## சமுதாயத்தில் புதிய அமைப்பு முறைகள்.

சமுதாய அமைப்பில் வாலிபர்கள் செய்யவேண்டிய வேலை அதிகமிருக்கிறது. அந்த வேலைகளைச் செய்ய வாலிபர் தேவை. நம்பிக்கையும், திறமையும் உடைய வாலிபர்களால்தான் அது முடியும். இங்கு கூடியிருக்கும் வாலிபர்களில் அனைவரும், ஒரே அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லர். மாறுபட்ட அரசியல் கொள்கைகளை உடையவர்கள், பல்வேறு கட்சியினருக்குள்ளும் ஒன்றுபட்ட கருத்துக்கள் சில இருக்கின்றன. சமுகத்தில் காணப்படும் ஊழல்களைப் போக்குவதில் ஒன்றுபடலாம். "கல்வியறிவு அதிகரிக்க வேண்டும்." என நாள் தவறாது மேடை தவறாது கூறுகிறோம். நடைபெறவில்லை. ஏன்? வாலிபர்களைக் கேட்கிறேன், அவர்கள் ஏன் ஒன்றுபடவில்லை. கல்வியைப் பரப்புவதில் வாலிபர்கள் ஒன்றுபட வேண்டும்.

நாடார் வகுப்பு, கல்வியில்லாது நலிந்திருக்கிறது. வாலிபர் முயற்சியெடுத்து, உணவு விடுதிகளும், உபகாரச் சம்பளங்களும் ஏற்படுத்துவதில் ஊக்கம் செலுத்தவேண்டும். இது போன்று அடிமை, அறியாமை, இவைகளை யகற்றி நாடார் வகுப்பை உயரிய நிலைக்குக்கொண்டுவர முயற்சிக்க வேண்டும்.

## அனைவருக்கும் ஏற்ற கொள்கைகள்.

புதிய சமுதாய அமைப்பில் வகுப்புப் பிரிவுகள் இருக்காது. ஆனால் இன்றுள்ள சமுதாயம் பிரிந்து கிடக்கிறது. மேல் வகுப்பினர், கீழ் வகுப்பினர், என்ற பிரிவுகளும் மலிந்துவிட்டன. இவை ஒழியவேண்டும். ஆனால் தானாக மறைந்து விடாது. தாழ்ந்தவனைச் சமநிலைக்கு வருமாறு தட்டி எழுப்பவேண்டும். மற்ற வகுப்பினருடன் ஒத்த நிலைக்கு உயர்த்தவேண்டும். அவ்வாறு உயர்த்தப்படவேண்டிய வரிசையில்தான் நாடார் பிரிவும் இருக்கிறது. பழம் பெருமையும், பெயர் மாற்றமும் நிலையை மாற்றியமைக்காது. வாலிபர்களின் ஒன்றுபட்ட உழைப்பு அதைச் செய்யும். பலப்படுத்தப்பட்ட நாடார் வகுப்பு நாட்டின் பொது நலத்தில் ஈடுபடும். ஈடுபட முடியும்.

சமுகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பதிலும், புதிய சமுகத்தின் அமைப்பை நிர்ணயிப்ப

திலும் இங்கு கூடியிருக்கும் வாலிபர்களின் முயற்சி தேவை. அந்தப் பொதுத் திட்டங்களுக்கு ஒன்றுபட்ட கருத்துகளுக்கு அனைவரும் ஒத்துக்கொண்ட கொள்கைகளுக்கு உழைக்க வாலிபர்களை அழைக்கிறேன்.

## பொதுக் கொள்கைகளுக்காக பணி புரிய அழைப்பு.

நாட்டிற்குப் புதியதோர் நிலை ஏற்பட்டிருக்கும் இந்நாளிலே நாம், கூடியிருக்கிறோம். உலகிலே ஆளும் ஜாதிகளிலே ஒன்று என்று பெருமையுடன் கூறிக்கொண்டு இந்தப் பரந்த உபகண்டத்தின்மீது இதுகாறும் ஆதிக்கம் செலுத்திவந்து இங்குள்ள வளத்தைச் சுரண்டிக்கொண்டிருந்த ஆங்கில ஏகாதிபத்தியம், ஆதிபத்தியத்தை விட்டுவிடும் வேளையில் கூடியிருக்கிறோம். ஏகாதிபத்யத்தின் இரும்புப் பிடியிலிருந்து விடுபட்டோம். இனி நாம் உள்நாட்டு ஏகாதிபத்யம், ஜாதிப் பித்தம், குலக்கொடுமை, மதத்தின் பேரால் நடத்தப்படும் கொடுமைகள், பொருள் அழிவுகள், வறுமை, முதலாளித்தத்துவம் ஆகிய பல்வேறு பிடிகளிலிருந்தும், விடுபட்டாக வேண்டும். அரசியலிலே புதிய நிலை பெற்றதற்குப் பொருள், ஆள்பவர்கள் மாறிவிட்டனர் என்ற அளவோடு இருந்துவிட்டால் போதாது. பதவிப் பிரியர்களுக்கு அது பிடிக்கலாம், இனிக்கலாம், ஆனால் வாலிபர்கள், உரிமைப்போர் வீரர்கள், ஆகியோருக்குப் பிடிக்காது, இனிக்காது. அவர்களின் இன்பக்கனவு, லண்டன் துரைமார்கள் மூட்டை முடிச்சுகளுடன் ஓடிவிடும் காட்சியுடன் மட்டும் நிற்கவில்லை. நாடு செழித்து, அழகுடன் விளங்க, எல்லோரும் இன்புற்றுவாழ, "ஏழை என்றும் அடிமை யென்றும், எவனுமில்லை ஜாதியில், இழிவுகொண்ட மனிதரென்போர் இங்கு எவரும் இல்லையே" என்ற கவியின் வாக்கு மெய்யாகவும், கண்முன்விளங்க, தொழில் வளம் பெருக, அதேபோது முதலாளித்துவம் பெருகாமல் மக்கள் சரிநிகர் சமானமாய் வாழும் காட்சியைக் காணவே வாலிபர்கள் விரும்புகிறார்கள்.

அந்தக் காட்சியைக்கற்பனைஉருவிலிருந்து நிஜமாக்கிக் காட்டும் மகத்தான வேலை வாலிபர்களின் முன் இருக்கிறது. விட்டுக் கொடுக்கும் சுபாவம், வளைந்திடும் தன்மை, கிடைத்தவரை போதுமென்ற திருப்தி, இவையல்ல வாலிபர்களின் நோக்கம். நமது வாழ்நாளிலே சமுதாயத்தைப் புதிய உருவாக்கிக் காட்டுவோம் என்று சூள் உரைத்துக் கொண்டு பணி புரியக் கிளம்ப வேண்டும்.

## ஆய்ந்து உணர வேண்டிய உண்மைகள்.

நமது நாட்டைப்பற்றி வெளியுலகம் கேவலமாக, கேலியாகக் கருதவும், பேசவும் முற்பட்டதற்குக் காரணம் என்னவென்று யோசித்தால் ஒரு உண்மை தெரியும், நம் நாடோ இயற்கை வளம் நிரம்பியது, மக்களோ, எண்ணிக்கையில் (40) கோடி. நிலப்பரப்போ, ஐரோப்பா அளவு. சரித்திரமோ வீர தீர பராக்கிரமச் செயல்கள் நிரம்பிய தொகுப்பு. மதமோ ஒன்று இரண்டல்ல. பலப் பல. அடியவர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஏராளம். இவ்வளவும் இருந்தும் இந்நாடு இழிநிலைபெற்றதற்கும், பிறநாட்டவரால் கேவலமாகக் கருதப்பட்டதற்கும் காரணம் நம் நாட்டுச் சமுதாய அமைப்பு முறைதான். காட்டுமிராண்டிக் காலத்து முறைகளை எல்லாம், கற்காலத்திலே இருந்த முறைகளை யெல்லாம் இன்றும் கட்டிப்பிடித்துக் கொண்டு பல்வேறு ஜாதிகளாய், ஏற்றத்தாழ்வுகள் மிகுந்து, சகலவிதமான சமூக இழிவுகளையும் தாங்கிக்கொண்டுள்ளதைக் கண்டுதான் பிறநாட்டவர் நம்மைக் கேலிபேசத் துணிந்தார்கள். இந்தச் சூட்சமத்தைக் கண்டறிந்தால், எந்தக் கட்சியிலுள்ள வாலிபர்களாயினும் சரி சமுதாயத்திருத்தப் பணிக்காக, ஒன்றுபட்டு ஐக்கிய முன்னணி ஏற்படுத்துவர். அதுதான் இன்றைய தேவை — அவசரமான தேவை. ஆண்மையாளர்களின் இன்றையத் திட்டம்.

## முடிவுரை.

முன்னேறிக் கொண்டிருக்கும் இன்றையஉலகிலேநம்நாடுஓர்உயர்ந்த இடம் பெறவேண்டுமானால், அரசியலிலே கிடைக்கும் விடுதலையுடன் திருப்தியடைந்து விடாமல், சமுதாயத்தைத் திருத்தியமைக்கும் பணியினை மேற்கொண்டால்தான் முடியும். இதைச் செய்யும்படி கேட்டுக் கொள்ள மட்டுமல்ல, செய்ய வாருங்கள் என்று அழைக்கவே இன்று இங்கு, மகிழ்ச்சியுடன் வந்தேன்.

## புரட்சிக் கவிஞர் கூறுகிறார்!

"இருட்டறையில் உள்ள தடா
உலகம் ஜாதி இருக்கின்ற
தென்பானும் இருக்கின்றானே,
மருட்கின்ற மதத்தலைவரும்
வாழ்கின்றாரே வாயடியும்
கையடியும்மறைவதெந்நாள்?
சுருட்டுகின்றார் தம்கையில்
கிடைத்தவற்றைச் சொத்
தெல்லாம் தமது என்று
சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே,
இல்லையாயின் விடுதலையும்
கெடுதலையும் ஒன்றேயாகும்."

என்று. வீர வாலிபர்களே! விடுதலை வீரர்களே! கவிஞரின் கருத்துரையை உங்கட்குக் கவனமூட்டி என் நன்றியை மீண்டும் கூறிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.


# முத்தமிழ் நிலையம்

## புதிய வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1. தமிழர் யார்? | 0 | 8 |
| 2. ஆரியர்—தமிழர் கலப்பு | 0 | 8 |
| 3. தமிழ்: பழமையும் புதுமையும் | 0 | 8 |
| 4. தமிழர் சமயம் எது? | 0 | 8 |
| 5. மரணத்தின் பின்? | 0 | 8 |
| 6. பெண்ணே பெரியவள், ஏன்? | 0 | 8 |
| 7. சிந்துவெளித் தமிழர் | 0 | 8 |
| 8. ஆரிய வேதங்கள் | 0 | 10 |
| 9. பாம்பு வணக்கம் (ஆராய்ச்சி) | 0 | 4 |
| 10. தமிழ் ஆராய்ச்சி | 0 | 6 |
| 11. திருக்குறள்: தெய்வக் கொள்கை | 0 | 4 |
| 12. சமணமும் சைவமும் | 0 | 8 |
| 13. உலகக்கலை உயர்வுக்கு உதவியவர் யார்? | 0 | 8 |
| 14. இராவணன் வித்தியாதரனா? | 0 | 8 |
| 15. ஏ, தாழ்ந்த தமிழகமே (C. N. அண்ணாத்துரை, M. A.,) | 0 | 6 |
| 16. பெண்கள் உலகம் | 0 | 14 |
| 17. நடன சுந்தரி (திரை ஒலி ஆசிரியர்) | 1 | 0 |
| 18. குமுதம் | 1 | 0 |
| 19. நாடகக்கலை மலர் (226 பக்கம்) | 2 | 0 |
| 20. தமிழர் சரித்திரம் | 3 | 0 |
| 21. இராவண காவியம் | 6 | 0 |
| 22. ஆயிரம் வினாக்களும் விடைகளும் | 1 | 0 |

முத்தமிழ் நிலையம்,
75, வரதாமுத்தியப்பன்தெரு, சென்னை.

# 7-ஆண்டுக்குப் பின்னர்!

—(o)—

'பெரும் தொகைப் பணத்தை முதலாகப் போட்டுத் தொழிற்சாலை வைத்திருக்கிறோம். கதி கெட்டதுகள், நம்மிடம் கையேந்தி கிடக்கிறதுகள், சோற்றுக்குத் தாளம் போட்டுக் கொண்டிருந்ததுகள், பகல் பட்டினி இராப்பட்டினி, பிழைத்துப் போகட்டுமெனக் கொஞ்சம் தாராளமாக நடந்துகொண்டால், ஓட ஓட மிரட்டுதுகள்.'

'தொழிற்சாலையை மூடினால் தெரியும் இதுகள் படுகிறபாடு! மறுபடியும் இதுகள் திருவோடு ஏந்தித் தெருத் தெருவாய்த் திரியவேண்டியதுதான். ஏராளமானபணம் என்னிடம் இருக்கிறது; அதனை வைத்துக்கொண்டு சுகமாகக் காலங்கழிக்க என்னால் முடியும். இதுகள்போல் நான் என்ன பிறர் வாயற்படியில் காத்துக் கிடக்கவா போகிறேன்?'

'இதுகள் கெட்ட கேட்டுக்குச் சங்கம் வைக்கப் போகிறதுகளாம். மணிக்கணக்கில் தான் வேலை செய்யுங்களாம். கூலியும் கூடுதலாகவேண்டுமாம், ஓய்வு வேண்டுமாம், இனிமேல் என் தொழிற்சாலையிலே பங்கு கேட்டாலும் நான் பங்கு கொடுக்கத்தான் வேண்டும் போலும், பார்க்கிறேன்; இதுகள் கொட்டத்தை நொடிப்பொழுதிலே தொலைத்துவிடுகிறேன்!'

'எஜமானை எதிர்க்கிறீர்களா நன்றி கெட்டவர்களே? எஜமான் என்ன தெய்வ பக்தியற்றவரா? இரக்க சிந்தனை இல்லாதவரா? பரோபகாரம் அவர் அறியாரா? கைகட்டிவாய்பொத்திக்கேட்டால் அவர் ஏதாவது செய்ய மாட்டாரா?'

'கொட்டினால் தாண்டா தெரியும் உங்களுக்கு! விடாதேயுங்கள்! செங்குருதி மண்ணிலே தோயட்டும்! பிணங்கள் காக்கை கழுகுகளுக்கு விருந்தாகட்டும்! மிரட்டின கண்களைத்தோண்டி எறியுங்கள்! சோறிட்டவர் சொல்புகாத காதுகளை, திருகி எடுங்கள்! அவரின் பண பலம் தெரியாத பதர்களை, இவ்வுலகத்தில் இருக்கவிடாதீர்கள்! உரிமைகேட்ட உள்ளங்களை சின்னா பின்னமாக்குங்கள்!'

"இதைப் பார்த்தாவது புத்தி பெறுங்கள். உரிமை என்று உளறுதீர்கள். ஒன்றுபடும் எண்ணத்தைக் கைவிடுங்கள். கூட்டு முயற்சிக்கு வழி செய்யாதீர்கள். உழைத்து உழைத்துச் சாகவேண்டியவர்களுக்கு உல்லாச வாழ்வு கிட்டுமா? ஆண்டவன் இட்ட கட்டளை இது! விதிக்கு வலிமை அதிகம்; நன்றி கொன்றால்நரகவாழ்வுதான்முடிவு!"

* * *

இது முதலாளித்வ முழக்கம். அதை எதிர்த்தனர் இருதோழர்கள்.

* * *

ஹென்றி எங்கல்மேன், லீ வேக்பீல்ட் இருதொழிலாளத்தோழர்கள். அமெரிக்க கோஹெலர் தொழிற்சாலையில், தொழிற்சங்கம் காண முயன்றனர். 1934-ம் ஆண்டு, ஜூலை 27ந் தேதி, நடுநிசி. கொலை செய்யப்பட்டார்கள், தொழிற்சாலைக் காவலாளிகளால். ஆவி காற்றோடு கலந்தது. உதிரம் பீறிட்டது. உடலம் தரையில் சாய்ந்தது. குற்றம்—தொழிலாளர்களை ஒன்றுபடுத்த முயன்றதுதான். தொழிற் சங்கமும் கண்டனர், தங்கள் இன்னுயிரைப் பரிசாகக் கொடுத்து.

அவர்களைத் தொலைக்கத்தான் முடிந்தது. அவர்கள் எடுத்துக் கொண்ட வேலையை அழிக்க முடியவில்லை. முன்னிலும் பலமடைந்தது. முடிவில் வெற்றியும் கிடைத்தது.

கோஹெலர் தொழிற்சாலைதொழிலாளர்கள், தொழிற்சங்கம் காணப் பல ஆண்டு முயன்றனர். தொழிற்சாலை நிர்வாகிகள், இந்த முயற்சியை முளையிலேயே வீழ்த்த, நயத்தாலும் பயத்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொண்டனர். 1933-ல் அமெரிக்கச் சர்க்கார், தொழில்வளர்ச்சிச்சட்டம் ஒன்றை இயற்றியது. தொழிலாளர்களுக்கு மிகவும் பாதகம் விளைவிக்கும் சட்டம். இதனைக் கண்ட சிதறிக் கிடந்த கோஹெலர் தொழிலாளர்கள் ஒன்றுபட்டனர். தொழிற் சங்கமும் கண்டனர். கூலியைக் கூட்டித்தர வேண்டினர். குறைந்த மணி வேலை என்றனர். வேலை செய்ய நல்ல வசதி வேண்டுமென வற்புறுத்தினர். இவ்வளவும் ஒருமனத்தோடு கேட்டனர்.

நிர்வாகிகள் அசைந்து கொடுக்கவில்லை. அலட்சியப் படுத்தினர். அதட்டி அடக்க ஆரம்பித்தனர். வேலை நிறுத்தம் விளைவாயிற்று. தொழிற்சாலை முன் அமைதியான மறியலும் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் போராட்டம் ஒரு நாள் அல்ல—ஓராண்டல்ல— ஏழு ஆண்டுகள் நடைபெற்றது. அமெரிக்கத் தொழிற் சங்க வரலாற்றில், முக்கியம் வாய்ந்தது இது. 1934-ல் ஜூலையில் ஆரம்பித்தது, மே மாதம் 1941ல் முடிவுற்றது ஏழுஆண்டுகள்!

மறியல் ஆரம்பத்தில் தான் முன் கூறிய இரு தொழிலாளர்கள் கொலை செய்யப்பட்டனர். அதனால் தொழிலாளர் கோரிக்கை நசித்து விடவில்லை, அவர்கள் மரணம், தொழிலாளர் வெற்றிக்கு வித்தாயிற்று. கூட்டுத் தோழர்களின் அவல வாழ்வைப் போக்க அவர்கள் மரணம் உறுதுணையாயிற்று. அமெரிக்கத் தொழிலாளர்-ஏன்-உலகத் தொழிலாள வர்க்கம்-அந்த இரு வீரர்களின் மரணத்தை என்றும் மறவாது. சலிப்படையாமல் ஏழாண்டு போரிட்டு வெற்றிகண்ட தொழிலாளர்களையும், பாட்டாளி மக்கள் மறக்க மாட்டார்கள்.

அடக்குமுறை ஆயுதம் பிரயோகிக்கப்படவில்லையா? ஏன் இல்லை? காவலாளிகளே இரு தொழிலாளர்களைக் கொலை செய்தனர் என்றால், அதிகாரமுடைய அரசாங்கம் சும்மாவா இருக்கும்? சிறைவாசம், தடியடி எதுவும் தொழிலாளர் உறுதியைக் குலைக்கவில்லை. பிளவு முயற்சியும் பலன் தரவில்லை. ஆசை வார்த்தையும் அவர்கள் கட்டுப்பாட்டைக் கலைக்கவில்லை. கருங்காலிகளைவேலைக்கமர்த்தியும், காலிகளை விட்டு நையப்புடைத்தும், எடுத்துக்கொண்ட சீர்குலைப்பு நடவடிக்கைகள் அனைத்தும் எதிர்பார்த்ததற்கு மாறான பலனையே கொடுத்தன. தொழிலாளர் கோரிக்கைக்கு இணங்கவேண்டியதாகவே போய்விட்டது. இதற்கு ஏழாண்டு தொழிலாளர் போரிடவேண்டி இருந்தது. மற்றவர் உழைப்பில் சுகம்அனுபவித்துப்பழகிப்போனவர்கள், அதனை விட்டுவிடத் தாங்களாக முன்வர மாட்டார்கள். சுகத்தை இழக்காமல் இருக்க எத்தகைய அக்கிரமத்தையும் செய்ய பின்னடையப் மாட்டார்கள். கெஞ்சினால் மிஞ்சுவார்கள். அதட்டினால் அடக்கம் காட்டுவார்கள். ஆதிக்கக்காரர்கள் என்றும் ஆதிக்கத்தை விட்டுக்கொடுக்க இசையார்கள். பொதுமக்கள் உண்மை உணர்ந்து, ஒன்றுபட்டு எழுந்தாலே போதும், ஆதிக்கம் தவிடு பொடியாகிவிடும்.

## வீரன் வகுத்தவழி

26—1—41 அன்று பம்பாயில், ஜனாப் ஜின்னாவைக்கண்டு பேசிய, விருதுநகர் தோழர் V. V. இராமசாமி அவர்கள், பாகிஸ்தான் பிரச்னைப்பற்றிப்பேசிவிட்டு, திராவிட நாடு பிரிவினை சம்பந்தமாகப்பேசிய போது ஜனாப்ஜின்னா கூறியது.

வி. வி. ரா:- எங்களுடைய திராவிடநாட்டின் கதி என்ன?

ஜின்னா :- உங்கள் திராவிட நாட்டின் ஜனங்களின் விருப்பம் இன்னதென்தெரியவேண்டும்.

வி. வி. ரா. :- பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் பிரசாரத்தினால், மக்கள் திராவிடநாட்டின் பிரிவினையின் அவசியத்தைஉணர்ந்திருக்கிறார்கள். தற்சமயம்அமுலில் இருக்கும் மத்திய அரசியல் அமைப்பினாலும் பல்வேறு அகில இந்திய அரசியல் ஸ்தாபனங்களாலும் மதிப்பும் செல்வாக்கும் குறைக்கப்பட்டுவருகிறதென்பதையும் தென்னாட்டின் உள்நாட்டு விவகாரங்களில்கூட வடநாட்டவர்களின் அபிப்பிராயங்கள் தான் அமுலுக்குக்கொண்டு வரப்படுகிறதென்பதையும்மக்கள்உணர்ந்துகொண்டார்கள்.

ஜின்னா :- அப்படியானால்உங்கள் இயக்கத்தை வலுப்படுத்திஒருமுகப்படுத்திக்கிளர்ச்சி செய்து வருவீர்களானால், உங்கள்நாடு உங்கள்நாடாகும். ஏன், வடநாட்டில் எம்மவர்படுகிறகஷ்டத்தைப்பார்க்கிலும் நீங்கள் மெஜாரிட்டியாகவிருக்கும், உங்கள் நாட்டிலே அதிகம் அல்லற்படுகிறீர்கள் என்பது எனக்குத்தெரியும். உங்கள் லட்சியம் நிறை வேறுவதில் என்னுடைய பூரண ஆதரவும் அனுதாபமும் உண்டு என்பதை மக்களுக்குத்தெரிவியுங்கள்.

*　　*　　*

அவர்கள் இருவரும் சந்தித்துப் பேசி, ஆறு ஆண்டுகளாகின்றன.

> "இயக்கத்தை வலுப்படுத்தி ஒருமுகப்படுத்திக் கிளர்ச்சி செய்தவண்ணம்."

இவை ஜனாப்ஜின்னாவின் வாசகங்கள்.

ஆறு ஆண்டுகளிலே, அவருடைய யோசனை எவ்வளவுதூரம் கையாளப்பட்டது என்பதை எண்ணும் போது பெருமூச்சன்றி வேறென்னபதில் பெறமுடிகிறது. ஜனாப்ஜின்னாவின் நல்லெண்ணத்தை நமக்கு எடுத்துக் கூறிய நண்பர் வி. வி. இராமசாமிக்கும் நமக்கும் இடையிலே இருக்கும் ராவ்சாகிப் பட்டம்கூட இன்னும் போகவில்லையே!

கட்டுப்பாடு! ஒருமுகம்! கிளர்ச்சி! ஆம்! வெற்றிவீரன் காட்டும்வழி. ஆமாம், ஆனால்...............!

——

## பூஜை

"இந்தியாவிலே இன்றைய தினம் மிகவும் சக்திவாய்ந்த மனிதர் ஜனாப் ஜின்னா என்பதில் சந்தேகமில்லை. இந்திய அரசியலில் துருப்புச் சீட்டு அவர் கையில் இப்போது இருக்கிறது.

ஜனாப் ஜின்னாவுக்கு இத்தகைய சக்தி எப்படி வந்தது? இந்தியாவில் 38 கோடி ஜனங்களும் அவருடைய விருப்பத்தை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும்படியான உயர்ந்த நிலைமையை அவர் எப்படி அடைந்தார்?

சமீப காலத்தில் முஸ்லிம் லீக் சபையினர் காட்டியிருக்கும் ஆச்சரியமான கட்டுப்பாடுதான் ஜனாப் ஜின்னாவுக்கு இத்தகைய வல்லமையை அளித்திருக்கிறது"

யார் தரும் புகழ்மாலை இது? நாமா? அல்ல! அல்ல! ஆனந்த விகடனின் அர்ச்சனை!! இது எந்த ஆனந்த விகடன்? எங்களுக்கு ஜின்னாவைக் கேலி செய்யும் ஆ. வி. தானே தெரியும் என்கிறீர்களா! அந்த ஆ. வி. தான்—கேலி செய்து செய்து மக்கள் மனதைத் தவறான வழியிலே திருப்பிக் கொண்டிருப்பினும், சில சமயம், உண்மையைக் கூறாவிட்டால் உள்ளம் வெடித்துவிடுவது போன்ற நிலை வந்தபோது, இது போல் 'பூஜை' மனோபாவத்தைக் காட்டுகிறது. அதிலும் இந்த அர்ச்சனை எப்போது நடந்தது? இந்த நாட்களிலா? அல்ல!

நாம் மேலே வெளியிட்டுள்ள வாசகங்கள், ஆனந்த விகடன், 1939ம் ஆண்டு நவம்பர் 19ந் தேதி இதழில் உள்ளன. எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, இந்த உண்மை ஆ. வி. க்குத் தெரியும்—என்றால், வீணாக மக்கள் மனதிலே தவறான எண்ணங்களைத் தூவி வந்தது. ஏன்? நாமறியோம் பராபரமே!

## தெரியுமா, உங்கட்கு.?

——

சுபாஷ் சந்திரபோஸ், காங்கிரஸ் காரியக் கமிட்டியில் எதிர்க்கப்பட்டு, பிளவு உண்டானபோது, தமது நிலையை மக்களுக்கு விளக்கிக் கூற, தென்னாட்டுக்குச் சுற்றுப் பயணம் செய்யவந்தபோது, இன்று முதலமைச்சராகி உள்ள ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார், சுபாஷ்போசை இங்கு யாரும் வரவேற்கக்கூடாது என்று 'ஸ்ரீமுகம்' பிறப்பித்தார்.

அவ்வளவு பக்தி என்று கூறுவீர்கள். சந்தேகமில்லை. ஆனால் ஜனநாயகத்துக்கு, அவர் தரும் மதிப்பு என்ன? பூஜ்யம்! அவ்வளவு ஜனநாயக ஞான சூன்யம் தேவைப் படுகிறது பக்திமானாக!

நேற்றுவரை, பிரபலராக, முன்னணித் தலைவராக, இருந்தவர் தானே சுபாஷ், அவர் ஏதோ அபிப்பிராய பேதம் காரணமாகக் காரியக் கமிட்டியிலே விவாதித்தார், எதிர்ப்பு வந்தது; வந்தால் என்ன? அவர் தம்முடைய நிலையை விளக்கிக் கூறுவது தானே நல்லது, அவருக்கு, அவர் ஆற்றிய தொண்டின் மேன்மையை, செய்த தியாகத்தின் சிறப்பை எண்ணியாகிலும், இந்த உரிமை—சாதாரண ஜனநாயக உரிமை — தரக்கூடாதா? என்று ஓமாந்தூரார் எண்ணினாரா? இல்லை! வரவேற்காதே! ஓரே உத்தரவு—அந்த நாட்களிலேயே—அதுவும் சுபாஷ் போசுக்கு அதுவும், தேசியத் தலைவர்களின் படவரிசையிலே, சுபாஷின் படம் காணப்பட்டு, ஓமாந்தூராரின் படம் சேர்க்கப்படாத நாட்களில்.

ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்க மறுத்தவர், இன்று தொழிலாளர் விஷயத்திலே, வீட்டுக்குள் இரு! நாட்டை விட்டு நட! என்று உத்தரவுகள் போட்டு அமல் நடத்துவதிலே ஆச்சரியமில்லை! அவர் பழக்கம் அது! அவர் இருக்கும் இடத்தில் கிடைக்கும் பயிற்சி அது!

—

Edited Printed Published by C. N. Annaduarai, M. A., at "Dravida Nadu" Press.
317—319 Hodgsonpet Conjeeveram.